Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

கர்ப்பிணி தாய்மாருக்கும், சிறார்களுக்கும்
ஏற்ற போஷாக்கு நிறைந்த
சத்து மா



ஜீவாகாரம்

அண்ணா தொழிலகம்

இணுவில் (சி-1617) T.P.-2223565

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2034 புரட்டாதி 20 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 ஷஃபான் 10 (07.10.2003) செவ்வாய்க்கிழமை இதழ் :07

## இடைக்கால நிர்வாக திட்டவரைபு குறித்த

# இறுதிக் கட்டக் கலந்துரையாடல் டப்ளினில் நேற்று ஆரம்பமானது!

(டப்ளின்)

**விடுதலைப் புலிகளால் சமர்ப்பிக்கப்படவுள்ள இடைக்கால நிர்வாக சபை தொடர்பான திட்டவரைபினை இறுதி செய்வதற்கான மாநாடு அயர்லாந்தின் டப்ளின் நகரில் நேற்றுக்காலை ஆரம்பமானது.**

நேற்றுக்காலை 9.30 மணியளவில் ஆரம்பமான இந்த மாநாடு சமாதான இணைப்பிற்கான நிலையத்தில் இடம் பெறுகின்றது. இணைபபிற்கான நிலையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் சீன் ஓ பொயில், இயன்வைற், நிகழ்ச்சி இணைப்பாளர் வாம்லி ஆகியோர் புலிகளின் பிரதிநிதிகளை வரவேற்றனர்.

இந்த மாநாட்டில் விடுதலைப்புலிகளின் அரசியற் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்செல்வன் தலைமையிலான குழுவினர் இடைக்கால நிர்வாகத் திட்டவரைபு குறித்து கலந்துரையாடல்களை நடத்தினர்.

இந்தக் கலந்துரையாடல்கள் இன்றும் தொடர்ந்து இடம்பெறும்.

இந்தக் கலந்துரையாடலில் தமிழ்ச்செல்வனுடன், மட்டு-அம்பாறை சிறப்புத்தளபதி கேணல் கருணா, சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன், சட்ட ஆலோசகர் உருத்திரகுமாரன், பொருளா (10 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பு நகரில் இன்று முதல் விசேட பாதுகாப்பு நடைமுறை!

(கொழும்பு)

கொழும்பு நகரின் பாதுகாப்பு ஏற்பாட்டை மேலும் பலப்படுத்துவதறகு, அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

நகரத்தில் இடம்பெறும் குற்றங்களை கூடியளவில் தடுப்பதே இதன் நோக்கமாகும்.

இதன்படி, பொலிஸார் சைக்கிள்களில் குழுக்களாக 24 மணிநேரமும் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளனர். கொழும்பு நகரில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுவ (10 ஆம் பக்கம் பார்க்க)



டப்ளினில் நேற்று ஆரம்பமான மாநாட்டில் புலிகளின் பிரதிநிதிகள் வரவேற்கப்படுவதை முதற் படத்திலும், மாநாட்டில் பங்குபற்றும் புலிகளின் பிரதிநிதிகள், சட்ட நிபுணர்களை இரண்டாவது, மூன்றாவது படங்களிலும் காணலாம்.

## வாள்வெட்டுக்கு இலக்கான இளைஞனின் சடலம் மீட்பு!

நீராவியடியில் அமைந்துள்ள சன சமூக நிலையத்துக்கு முன்பாக வாள்வெட்டுக்கு இலக்காகி இறந்த இளைஞன் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்று இரவு 10.25 மணியளவில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இவரிடமிருந்து கடற்படையினரால், வழங்கப்பட்ட அடையாள அட்டை ஒன்றும் ஐ.பி.எம்.எஸ் கணினிப் பயிற்சி நிலையத்தினால் வழங்கப்பட்ட அனுமதி அட்டையொன்றும் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

கடற்படையினரால் வழங்கப்பட்ட அடையாள அட்டையில் நாரந்தனை தெற்கு ஊர்காவற்துறையைச் சேர்ந்த யோகேஸ்வரன் அஜந்தீப் (வயது 21) என குறிப்பிடப்பட்டுள்ளது. இதே வேளை, ஐ.பி.எம்.எஸ். இனால் வழங்கப்பட்ட அனுமதியட்டையில் வண்ணார்பண்ணை, ஐயனார் கோயிலடி என்ற விலாசமும் குறிப்பிடப்பட்டுள்ளது. இறந்தவரின் சடலம் அடையாளம் காணும்பொருட்டு யாழ். போதனா வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. சடலத்தின் கழுத்து, கால், கை, ஆகிய பகுதிகளில் வாள்வெட்டுக் காயங்களும், வயிற்றுப் பகுதியில் ஆழமாக குத்தப்பட்டும் காணப்படுகின்றது.

## யாழ்.தண்ணீர் தாங்கியடி சம்பவம்; விசாரணை நடத்துவதற்கு உத்தரவு

(கொழும்பு)

யாழ்.தண்ணீர்தாங்கியடியில் இடம் பெற்ற சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்துமாறு பாதுகாப்பு அமைச்சு உத்தரவிட்டுள்ளது.

கடந்த நான்காம் திகதி யாழ். கண்டி வீதியிலுள்ள தண்ணீர்தாங்கியடியில் இராணுவ வாகனமும், மோட்டார் சைக்கிளும் விபத்துக்குள்ளானதில் இரு இளைஞர்கள் உயிரிழந்தனர். இதன்போது, ஆத்திரமடைந்த மக்கள் வீதிகளில் இறங்கி மறியல் போராட்டத்தினை நடத்தி தமது எதிர்ப்பினைத் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாகவும், உயிரிழந்த இடத்திலிருந்து சடலத்தினையும், வாகனத்தினையும் அகற்றியமை தொடர்பாகவும் விசாரணைகள் நடத்தப்படும் என, பாது (10 ஆம் பக்கம் பார்க்க)

## இதுவரை 49 ஆயிரம் படையினர் ராணுவத்தை விட்டுத் தப்பியோட்டம்

### பேராதனைப் பல்கலைக்கழக ஆய்வில் தகவல்

(கொழும்பு)


இராணுவத்தை விட்டு 49 ஆயிரத்து 143 படையினர் தப்பி ஓடியுள்ளதாக இறுதியாக மேற்கொள்ளப்பட்ட ஆய்விலிருந்து தெரியவந்துள்ளது.

பேராதனைப் பல்கலைகழகத்தின் சமூகவியல்துறை இந்த ஆய்வை மேற்கொண்டது. இந்த ஆய்வில் இருந்து தப்பி ஓடியவர்களில் 623 அதிகாரிகள் நிலையினரும் அடங்குவதாக தெரியவருகிறது.

இராணுவத்தில் இருந்து தப்பிஓடியோர் இலங்கை இராணுவத்தின் மொத்த ஆட்பலத்தின் மூன்றில் ஒரு பங்காகும். இராணுவத்தின் மொத்த ஆட்பலம் ஒரு லடசதது 34 ஆயிரம் பேராகும்.

இராணுவத்தைவிட்டு பெரும்பான்மையான படையினர் தப்பிஓடியமைக்கு தரம் குறைந்த தலைமைத்துவம், தகுதிவாய்ந்த அதிகாரிகள் உருவாக்கப்படாமை, தரம் குறைந்த நிர்வாகக் கட்டமைப்பு, போதிய பயிற்சியின்மை, போர்மீதான வெறுப்பு மற்றும் குடும்ப, தனிப்பட்ட காரணங்களினாலேயே படையினர் (10 ஆம் பக்கம் பார்க்க)

### விண்ணாணம் விநாசியர்



தப்பி ஓடுகிறதினாலையும் ஒரு சாதனை நிலைநாட்டியிருக்கினம்.

## புலிகளின் நூலை எடுத்துச்சென்ற கூட்டுறவு ஊழியர்கள் கைதாகினர்!

### பருத்தித்துறையில் சம்பவம்

(வடமராட்சி)

பருத்தித்துறை அதியுயர் பாதுகாப்பு வலயத்தினுள் விடுதலைப் புலிகளின் 'நெருப்பாற்று நீச்சல்' நூலினை எடுத்துச்சென்ற பருத்தித்துறை பலநோக்கு கூட்டுறவுச் சங்க ஊழியர்கள் இருவர் நேற்று இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டனர்.

தும்பளையைச் சேர்ந்த சுப்ரமணியம் பிரபாகரன் (வயது 51), அல்வாயைச் சேர்ந்த சின்னையா செல்வராசா (வயது 20) ஆகிய இருவருமே கைதுசெய்யப்பட்டனர்.

நேற்றுக்காலை அதியுயர் பாது (10 ஆம் பக்கம் பார்க்க)

EXPOAIR

your friend in the skies...

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 ~ 2223891 2226297
0712348888 0712349999 074512666 012360290 012360291
email . jaffna @ expoavi . com.

(சி -1423)



எக்ஸ்போஎயார்

வான் வெளியில்
உங்கள் தோழன்...

# யாழ்.பல்கலைக்கழக மீன்பிடி வளாகத்தை மன்னார் மாவட்டத்தில் அமைக்க வேண்டும்

## அடைக்கலநாதன் எம்.பி உயர்கல்வி அமைச்சுக்கு கடிதம்

யாழ்.பல்கலைக்கழகத்தின் மீன்பிடி வளாகத்தை மன்னார் மாவட்டத்தில் அமைக்க வேண்டும் என்று செல்வம் அடைக்கலநாதன் அவர்களால் உயர்கல்வி அமைச்சிற்கும் யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தருக்கும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்தின் அமைவிடம் அருவிகள், கலக்கும் வண்டல் பிரதேசங்கள், குடாக்கள், அரபிக் கடல் சங்கமிக்கும் பகுதியில் அமைந்திருத்தல், கண்டத்தினையும், கடலடித்தள மேடையினையும், சேற்றுப் பகுதி, மணல்பகுதி, தீவுப்பகுதியின் கிழக்கு, மேற்கான அமைப்பு, வடகீழ் பருவப்பெயர்ச்சிக் காலவேளையில் தென்பகுதிக் கடலிலும், தென்மேல் பருவப் பெயர்ச்சிக் காலத்தில் வடபகுதிக் கடலிலும் மீன்பிடித் தொழிலை நடத்த முடியுமென்ற நிலையில் இலங்கையில் மற்றொரு மாவட்டங்களிலும் பார்க்க இம் மாவட்டம் சிறந்து விளங்குவது ஆகியவற்றுடன், பாக்கு நீரிணைப் பகுதியில் பாரிய நீரோட்டம் காணப்படுவதும் கடல்நீர் ஏரிகளும், குடாக்களும் இப்பகுதியில் மீன்பிடித் தொழிலுக்கு மிகவும் பொருத்தமானதென்பதும் மேற்படி கடிதம் மூலம் சுட்டிக்காட்டப்பட்டது.

மன்னார் கடற்பரப்பின் கூடுதலான பங்கு கடற்தாவரங்கள், சல்லியைக் கொண்டிருப்பதனால், மீன் உற்பத்திக்கு உகந்த வளம் நிறைந்த இடமாக இம்மாவட்டம் காணப்படுவதும், இது மாத்திரமில்லாமல் இந்தப் பகுதியில் காணப்படும் கண்ணா மரங்கள் மீன் இனவிருத்திக்கான சூழலை உருவாக்குகின்றது என்பதும் அது மாத்திரமல்லாமல் இப்பகுதி தீவுக் கூட்டங்களும் மீனினப் பெருக்கத்திற்கு வழிசமைக்கின்றன என்பதும் இந்து சமுத்திரமும், வங்காள விரிகுடாவும் கலக்கும் இடமாக மன்னார் மாவட்டம் அமைந்திருப்பதனால் மீனினவிருத்திக்கான காரணியாக இது அமைந்துள்ளதென்பதும் சுட்டிக்காட்டப்பட்டது.

மேற்படி காரணிகளை மையமாகக்கொண்டு யாழ். பல்கலைக்கழகத்தின் மீன்பிடி வளாகம் ஆக்குவதற்கு மன்னார் மாவட்டம் மிகவும் பொருத்தமான இடமென எடுத்துக்காட்டி உயர்கல்வி அமைச்சும் யாழ்.பல்கலைக்கழக பீடாதிபதிகளும் இதை கவனத்திலெடுத்து நடைமுறைப் படுத்த வேண்டுமென நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் கோரிக்கை விடுத்துள்ளார்.

# யாழ்.குடாநாட்டின் அபிவிருத்திக்கு நிக்கொட் 352 மில்லியன் நிதியுதவி

யாழ்.குடாநாட்டில் சில அபிவிருத்தித் திட்டங்களுக்கு நிக்கொட் அமைப்பு 352 மில்லியன் ரூபாவினை ஒதுக்கியுள்ளது.


சுகாதாரம், குடிநீர், விவசாயம், மீன்பிடி, வீதிதிருத்தம் சமூகநலன் திட்டம், வீடுஅமைத்தல், கால்நடை அபிவிருத்தி ஆகியவற்றுக்கே இந்த நிதி பயன்படுத்தப்படவுள்ளது.

ஒதுக்கப்பட்ட 352 மில்லியன் ரூபாயில் 223 மில்லியன் ரூபாவுக்கான திட்டங்களே தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாகவும் மிகுதி 129 மில்லியன் ரூபாய்க்கான செயற்திட்டங்கள் விரைவில் ஆரம்பிக்கப்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிக்கொட் அமைப்பின் மூலம் இதுவரை 75 பாடசாலைகளைச் சேர்ந்த 8 ஆயிரத்து 500 மாணவர்களுக்கான தளபாடங்கள் வழங்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.







யுனஸ்கோ உதவியுடன் யாழ்.பல்கலைக்கழக ஊடகவள நிலையத்தால் நடத்தப்பட்ட பயிற்சிக் கருத்தரங்கில், வெளியிடப்பட்ட ஊடக மடலை துணைவேந்தர் பேராசிரியர் மோகனதாஸ், பேராசிரியர் சபா ஜெயராசாவிடம் பெற்றுக் கொள்வதை முதற் படத்திலும், பக்க வடிவமைப்பாளர் பயிற்சிப் பட்டறையில் பங்குகொண்டோரை அடுத்த படத்திலும், பயிற்சி பெற்ற பக்க வடிவமைப்பாளருக்கு சான்றிதழ் வழங்குவதை மூன்றாவது படத்திலும் காணலாம்.

# சின்னஞ்சிறு செய்திகள்

### செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டின் கரையோரப் பிரதேசத்தினை பாதுகாப்பது தொடர்பான செயலமர்வொன்று, நாளைமறுதினம் காலை 9 மணிக்கு யாழ். செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

கரையோர பாதுகாப்பு திணைக்களத்தின் உத்தியோகத்தர்களினால நடத்தப்படுகின்ற இக்கருத்தரங்கிற்கு யாழ்.மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதன் தலைமை தாங்குவார்.

இந்த நிகழ்வில் ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட அரசாங்க உத்தியோகத்தர்கள் கலந்துகொள்வர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

### கருத்தரங்கு

(நெடுந்தீவு)

நெடுந்தீவு பாடசாலைகளில் கல்விபயிலும் க.பொ.த (சா/த) மாணவர்களின் கணிதம், ஆங்கிலம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களுக்கான கருத்தரங்குகள் - இன்றும், நாளையும் நெடுந்தீவு மகாவித்தியாலயத்தில், பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினரால் நடாத்தப்படவுள்ள இக்கருத்தரங்குகள் பி.ப 3 மணிக்கு ஆரம்பமாகி - தொடர்ந்தும் நடைபெறும். இதில் அனைத்து மாணவர்களையும் கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

### அவசர கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தின் பொதுக்கூட்டம் ஒன்று எதிர்வரும் வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

ஆரியகுளம் சந்தியில் அமைந்துள்ள புதிய உயர் கல்லூரியில் காலை 10.30 மணிக்கு நடைபெறவுள்ள இந்தக் கலந்துரையாடலில் அனைத்து வேலையற்ற பட்டதாரிகளையும் கலந்துகொள்ளுமாறு, சங்கத்தின் தலைவர் அன்ரனி றெஜினோல்ட் அறிவித்துள்ளார்.

இது வேலைவாய்ப்புத் தொடர்பான அவசர கலந்துரையாடல் என்றும், இன்றைய கூட்டத்தில் கலந்துகொண்டு, மீள் பதிவுகளை மேற்கொள்ளமுடியும் எனவும் அதன் தலைவர் தெரிவித்தார்.

### கத்திக்குத்தில் குடும்பஸ்தர் காயம்!

இனந்தெரியாதோரால் கத்திக் குத்துக்கு இலக்காகி, குடும்பஸ்தர் யாழ்.போதனாவைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

நேற்றுமுன்தினம் இருபாலை கிழக்கில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் எ.நடராசா (வயது 55) என்பவரே காயமடைந்து சிகிச்சை வருகிறார்.

### எரிகாயம்

போத்தலிலிருந்த பெற்றோல் தவறுதலாக தீப்பற்றியதில், காலில் எரிகாயமடைந்த நிலையில் நபரொருவர் - யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் தாளையடியில் நடைபெற்ற இச்சம்பவத்தில் வி.ஞானேஸ்வரன் (வயது 39) எனும் நபரே காயமடைந்தார்.

# சமாதான நீதிவான்களாக நியமனம் பெற்றோர்



அராலி வீதி சங்கானையைச் சேர்ந்த திரு.வே.விமலசிங்கம் அண்மையில் மல்லாகம் மாவட்ட நீதிபதி திருமதி ச.இளங்கோவன் முன்னிலையில் இலங்கை முழுவதற்குமான சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

இவர் காலிமேக்கன்டைல் வங்கி, யாழ்.வர்த்தகவங்கி ஆகியவற்றில் 26 வருடங்கள் கடமையாற்றிய பின் சுழிபுரம் விக்டோரியா கல்லூரியிலும், சித்தன்கேணி போரூட் கல்லூரியிலும் ஆங்கில சுருக்கெழுத்து தட்டெழுத்து போதனாசிரியராக 4 வருடங்கள் கடமையாற்றியுள்ளார்.



காரைநகர் களபூமியை பிறப்பிடமாகக் கொண்டவரும், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தில் வசித்தவரும் தற்போது 18/42 ஆவது ஒழுங்கை, வெள்ளவத்தை, கொழும்பு 06 இல் வசிப்பவருமான தம்பையா அம்பிகைபாகன் கொழும்பு மாவட்ட நீதிபதி திரு.எஸ்.ஸ்ரீஸ்கந்தராசா முன்னிலையில் அகில இலங்கைச் சமாதான நீதிவானாக் சத்தியப்பிரமாணம் செய்துள்ளார்.



சி.இன்பரூன் 12.09.2003 ஆம் திகதி யாழ்.மாவட்ட நீதிபதி இ.த.விக்னராஜா முன்னிலையில் யாழ்.மாவட்ட சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

# புனரமைப்பு தொடர்பான ஆய்வுப்பட்டறை செயலகத்தில்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் மீள்குடியேற்றம் புனர்வாழ்வு புனரமைப்பு மற்றும் நிவாரணப் பணிகளை மேற்கொள்வது தொடர்பாகவும், அவற்றினை எவ்வாறு நடைமுறைப்படுத்துவது தொடர்பாகவும் ஆராய்வதற்கு யாழ். செயலகத்தில் ஆய்வுப்பட்டறையொன்று நடைபெறவுள்ளது.

யாழ்.மாவட்ட அரச அதிபர் தலைமையில் எதிர்வரும் 11 ஆம் 12 ஆம் திகதிகளில் யாழ்.செயலக கேட்போர் கூடத்தில் நிகழும் ஆய்வுப்பட்டறையில் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள், உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் திணைக்கள உத்தியோகத்தர்களும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்த நிகழ்வில் யாழ்.செயலகத்தின் திட்டப்பணிப்பாளர் சுந்தரம் பிள்ளை, அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையப் பிரமுகர் பொறியியலாளர் பொ.விக்கினேஸ்வரன், உலக சுகாதார நிறுவனத்தின் ஆலோசகர் டொக்டர் என். சிவராஜா, பல்கலைக்கழக விவசாய பீடத்தின் பீடாதிபதி எஸ்.இராஜதுரை ஆகியோர் கருத்துரை வழங்கவுள்ளனர்.

# வாழ்வியற் கண்காட்சி

தீவுப்பகுதி தெற்குப் பிரதேச கலாசாரசபை மற்றும் வேலணை பிரதேச செயலகம் இணைந்து நடத்தும் - கலைவிழாவும், வாழ்வியல் கண்காட்சியும் - 2003 என்ற நிகழ்ச்சி நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் தேவஸ்தான கல்யாண மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 9,10,11 ஆம் திகதிகளில் மு.ப 10 மணி தொடக்கம் பி.ப 5 மணிவரை இந்த நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.

உதவிப் பிரதேச செயலாளர் ப.லோகநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்ச்சியில்- கண்காட்சி நிகழ்வுகள், கலைவிழா நிகழ்வுகள் என்று இரு நிகழ்வுகளாக நடைபெறவுள்ளன.

கண்காட்சி நிகழ்வில் - பிரதம விருந்தினராக சிறான் இணைப்பாளர் செ.இரத்தினம் கலந்துகொள்ளவுள்ளார். நுண்கலைத்துறை விரிவுரையாளர் பா.அகிலனின் உரையும் இடம்பெறவுள்ளது. கலைவிழா நிகழ்வு 11 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் - பிரதம விருந்தினராக கலாநிதி எஸ்.எல்.சிவலிங்கராஜா கலந்துகொள்ளவுள்ளார். சிறப்பு விருந்தினராக கலாநிதி தி.கமலநாதன் கலாநிதி கி.விசாகரூபன் ஆகியோரும், யாழ்.மாவட்ட அரசியற்துறை துணைப்பொறுப்பாளர் செம்மணன், அரசியற்துறை தீவகக் கோட்டப் பொறுப்பாளர் அருந்தவம் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். தொடர்ந்து கலைநிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

# கணிதப்பிரிவு மாணவர்களுக்கு விசேட புலமைப்பரிசில் திட்டம்!

(கொழும்பு)

கணித பாடத்தை கற்கும் கல்விப் பொதுத்தராதர உயர்தர மாணவர்களுக்கு, புலமைப் பரிசில் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்த - மனித வள அபிவிருத்தி, கல்வி, கலாசார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

டயலொக் ஜி.எஸ்.எம். ஆதரவுடன், அமுல் செய்யப்படும் இந்தத் திட்டப் பிரகாரம் - தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்கு மாதாந்தம் 2500 ரூபா வீதம் வழங்கப்படும்.

இந்தப் புலமைப் பரிசிலுக்காக 25 மாவட்டங்களில் இருந்தும் மொத்தம் 25 மாணவர்கள் தெரிவுசெய்யப்படுவார்கள். அத்துடன், மூன்று இனங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு புலமைப் பரிசில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

### கௌரவிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.வசாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தில் கல்வி கற்று பல்கலைக்கழகத்துக்கு தெரிவான மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு நடைபெறவுள்ளது.

உரும்பிராயில் இயங்கும் இந்தப் பாடசாலையில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை மாலை 2 மணிக்கு இந்த நிகழ்வு நடைபெறவுள்ளது.

பழைய மாணவர் சங்கத் தலைவர் வ.சத்தியசீலன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக விவசாய பீடாதிபதி சு.இராசதுரையும், சிறப்பு விருந்தினராக பாடசாலை அதிபர் க.கனகராஜாவும், கௌரவ விருந்தினராக தெல்லிப்பளை கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் க.சந்திரபாலனும் கலந்துகொள்ளவுள்ளனர்.


## சிறுவிளம்பரம்

5 மொடேன் மில்க்வைற் நீலசோப் அல்லது பவர் சோப் மேலுறைகளை அனுப்பி - திருவெம்பாவை, சகலகலாவல்லி மாலை, கந்தசட்டி கவசம் ஏதாவது ஒரு நூலைப் பெற்றுக்கொள்ளுங்கள். மில்க்வைற் சோப் இண்டஸ்றியல் 527, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம். (சி-1658)

நிறைஞ்சனாஸ் சங்கானை
மாதவன், சிம்ரன், சிநேகா நடித்த
பார்த்தாலே பரவசம்
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே.)
STRATEGIC COMMAND
(சி-1618)

ராஜா யாழ்ப்பாணம்.
பிரசாந், கிரண், நடித்த
வின்னர்
காட்சிநேரம் 10.30, 2.30, 6.30.
9.30 (பு.நே)
(சி-1619)



குமரப்பா, புலேந்திரன் உட்பட பன்னிரண்டு வேங்கைகளின் நினைவுநாள் நேற்று தீருவில் மாவீரர் துயிலும் இல்லத்தில் அனுஷ்டிக்கப்பட்டது. இதன்போது ஈகச் சுடரேற்றல், மலரஞ்சலி மற்றும் அகவணக்கம் செலுத்துதல் ஆகியன இடம்பெறுவதை படங்களில் காணலாம்.

# இடைநிறுத்தப்பட்ட சமாதானப் பேச்சு மீளவும் ஆரம்பிக்கப்பட வேண்டும்!

## அஞ்சல் தொலைத்தொடர்பு நிலைய கல்முனைக் கிளை தீர்மானம்

கல்முனை கிளை அஞ்சல் தொலைத்தொடர்பு உத்தியோகத்தர் சங்கம் தனது இருபதாவது வருடாந்த பொதுக்கூட்டத்தினை சம்மாந்துறை தபாலக மண்டபத்தில் நேற்று முன்தினம் நடாத்தியது.

அஞ்சல் உத்தியோகத்தர் பி.பாஸ்கரன் தலைமையில் நேற்றுமுன்தினம் காலை 10 மணி தொடக்கம் மாலை 3 மணிவரை இந்தக் கூட்டம் நடைபெற்றது. இங்கு நடைபெற்ற கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

இடைநிறுத்தப்பட்ட சமாதானப் பேச்சுவார்த்தை மீள ஆரம்பிக்கப்படவேண்டும். ஏற்றுக்கொள்ளப்படவுள்ள இடைக்கால நிர்வாக சபையில் மூவின மக்களின் இறைமையும் பாதுகாக்கப்படவேண்டும். அரசினால் சமர்ப்பிக்கப்படவுள்ள வரவு - செலவுத் திட்டத்தில் சகல அரச ஊழியர்களின் சம்பளமும் 5 ஆயிரம் ரூபாவினால் அதிகரிக்கப்படவேண்டும்.

அத்துடன், அஞ்சல் தொலைத்தொடர்பு சேவையிலுள்ள சகல பதவி வெற்றிடங்களும் உடனடியாக நிரப்பப்படவேண்டும். இரண்டாம் தர அஞ்சல் அதிபர்களுக்கு பரீட்சை நடைபெறும்போது வினாப்பத்திரம், தமிழ், சிங்களம் ஆகிய இரு மொழிகளிலும் ஒரே தாளில் அச்சுப்பதிக்கவேண்டும் எனவும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அத்துடன், அம்பாறை மாவட்டத்திலுள்ள மூத்த பத்திரிகையாளர்களான ஏ.எல்.எம்.சலீம், வி.ரி. சகாயதேவராஜா ஆகிய இருவரும் இவர்களால் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.

# வடக்கு –கிழக்கு யுத்தத்தினால் ஒன்பதாயிரம் சிறுவர்கள் பாதிப்பு!

வடக்கு - கிழக்கில் இடம்பெற்ற யுத்த நடவடிக்கைகளால் சுமார் ஒன்பது லட்சம் சிறுவர்கள் பாதிக்கப்பட்டிருப்பதாக பிரதேச செயலக மட்டத்தில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் இருந்து தெரிய வருகிறது.

இந்தத் தகவலை வடக்கு - கிழக்கு மாகாண சிறுவர் நன்னடத்தை ஆணையாளர் என்.ஆர்.ரஞ்சனி தெரிவித்தார்.

யுத்தத்தினால் சொந்த இருப்பிடங்களை விட்டு மூன்று இலட்சத்து எண்பதா யிரம் சிறார்கள் அகதிமுகாம்களில் தஞ்சமடைந்துள்ளனர்.

பெற்றோரால் கைவிடப்பட்ட ஏழாயிரம் ஆதரவற்ற சிறுவர்கள் பராமரிப்பு நிலையங்களில் தஞ்சமடைந்துள்ளனர்.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் 157 சிறுவர் பராமரிப்பு நிலையங்கள் இயங்கிவருவதாகவும் இவற்றில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் 34 நிலையங்கள் இயங்குவதாக இந்த ஆய்வுகளிலிருந்து தெரியவந்திருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# ஐக்கிய தேசிய முன்னணி அரசுக்கு எதிராக போராட்டம் நடத்த எதிர்க்கட்சிகள் ஏற்பாடு!

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி அரசுக்கெதிராக எதிர்க்கட்சிகள் போராட்டம் ஒன்றை நடத்தவுள்ளன.

கோட்டை ரயில் நிலையத்தின் முன்பாக இன்று மாலை 4.30 மணியளவில் இந்தப் போராட்டம் நடைபெறவுள்ளது. மகிந்த ராஜபக்ஷ தலைமையில் எதிர்க்கட்சிகள் இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளன.

அரசாங்கத்திற்கு எதிராக நடைபெறும் இந்தப் போராட்டத்தில் அரச திணைக்களங்களில் வேலை செய்யும் ஊழியர்கள் பலரும் கலந்து கொள்ளவுள்ளனர். 205 அரச திணைக்களங்கள் இந்த வகையில் அரசுக்கு எதிரான போராட்டத்தில் கலந்து கொள்ளவிருக்கின்றன.

அரசினால் வெளியிடப்பட இருக்கும் வரவு செலவுத் திட்டத்தில் ஊழியர்களின் சம்பளத்தை உரிய முறையில் வழங்க வேண்டும் என்றும் அரச நிறுவனங்கள் தனியார் மயமாக்கப்பட்டு வருவது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்றும் இந்தப் போராட்டத்தில் வலியுறுத்தப்படவுள்ளதாக எதிர்க்கட்சிகள் தெரிவித்துள்ளன.

# வேலை நிறுத்தம் முடிவுற்றதாக ரயில்வே சம்மேளனம் தெரிவிப்பு

(கொழும்பு)

ரெயில்வே ஊழியர்களால் மேற்கொண்ட வேலைநிறுத்தம் முடிவுற்றுள்ளதாக ரெயில்வே சம்மேளனம் தெரிவித்துள்ளது.

ரெயில்வே அதிகார சபையின் தலைவர் பி.எச்.நவதுங்காவுடன் நடத்திய பேச்சுவார்த்தையினையடுத்தே இந்த முடிவு எடுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

சகல ஊழியர்களும் உடனடியாக வேலைக்குத் திரும்ப வேண்டுமென்று கூட்டுதொழிற் சங்க சம்மேளன ஏற்பாட்டாளர் தெரிவித்தார்.



திருமலை பத்திரகாளி அம்மன் ஆலயத்தில் இடம்பெற்ற கும்பச்சரிவு விழாவில் பக்தர்களின் கரகாட்டத்தைப் படங்களில் காணலாம்.

## பாடசாலைகளுக்கு நிதி ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் கல்வி வலையத்தில் அமைந்துள்ள பாடசாலைகளுக்கு பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தில் 26 இலட்சத்து ஐம்பதினாயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

கோப்பாய் பிரதேச செயலக பிரிவில் ஏழு பாடசாலைகளுக்கும் நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவில் ஐந்து பாடசாலைகளுக்கும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.

# நாட்டுப் பற்றாளர்கள் நினைவாக துக்கதினம் அனுஷ்டிக்க ஏற்பாடு!

(அம்பாறை)

அம்பாறை மாவட்டம் காஞ்சிரங்குடா பகுதியில் கடந்த ஆண்டு விசேட அதிரடிப்படையினரால் கொல்லப்பட்ட ஏழு நாட்டுப்பற்றாளர் நினைவாக இன்று துக்கதினம் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

அம்பாறை மாவட்ட இந்து ஆலயங்களின் ஒன்றியம் இந்த ஏற்பாட்டினைச் செய்துள்ளது.

இந்தத் துக்க தின நிகழ்வில், தமிழ், முஸ்லிம் வர்த்தகர்கள் தமது வர்த்தக நிலையங்களை இன்று பிற்பகல் 4 மணிமுதல் நாளை காலை 6 மணிவரை பூட்டி, தமது உணர்வுகளை வெளிப்படுத்துமாறு ஒன்றியம் கேட்டுள்ளது. (07)

# மூதூர் பிரதேச விவசாயிகளுக்கு பொருண்மிய நிறுவனம் கடனுதவி!

திருகோணமலை - மூதூர் பிரதேசத்தில் பெரும்போக நெற்செய்கையை மேற்கொள்ளவுள்ள விவசாயிகளுக்கு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுப் பிரிவினால் கடன் வழங்கப்படவுள்ளது.

மூதூர் பிரதேசத்தில் இம்முறை ஆயிரம் ஏக்கரில் பெரும்போக நெற்செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது. இவ்வாறு நெற்செய்கை மேற்கொள்ளும் தமிழ் விவசாயி ஒருவருக்கு தலா 12 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்படவுள்ளத்தாக திருமலை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் திலக் தெரிவித்தார்.

இவ்வாறு கடனைப் பெற்றுக் கொள்ளும் விவசாயிகள் நெல் அறுவடை முடிந்த பின்னர் பணத்தை மீளச் செலுத்தலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது. (04)

## பிளாஸ்ரிக் சத்திரசிகிச்சை

வவுனியா பொது வைத்தியசாலையில் எதிர்வரும் 9ம் திகதி முதல் 22ம் திகதி வரை பிளாஸ்ரிக் சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்படவுள்ளதால் பிளாஸ்ரிக் சத்திரசிகிச்சை செய்ய விரும்பும் நோயாளிகள் வவுனியா பொது வைத்தியசாலை வைத்திய அதிகாரியுடன் தொடர்பு கொள்ளுமாறு யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் எஸ். சதுர்முகம் அறிவித்துள்ளார்.

# கருஜெயசூரியாவின் வீடு நேற்றுமுன்தினம் தாக்கப்பட்டது

மின்சக்தி, எரிபொருள்துறை அமைச்சர் கருஜெயசூரியாவுக்குச் சொந்தமான மீரிகமவிலுள்ள வீட்டிற்கு நேற்றுமுன்தினம் குண்டு வீசப்பட்டதோடு, கற்களும் வீசித் தாக்குதல் நடத்தப்பட்டது என்று தெரிவிக்கப்படுகிறது.

மீரிகம கண்டல ரெஸ்ட் என்ற ஹொட்டேலின் உரிமையாளரும், அவரது ஊழியர்களும் இந்தச் சம்பவத்தில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குண்டு வீசும்பொழுது, வீட்டில் அவரது சகோதரி இருந்தார் என்றும், வீட்டின் ஜன்னல் கண்ணாடிகள் சேதமாகியதால், பெருத்த நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

சந்தேகத்தின்பேரில் இருவர் கைதுசெய்யப்பட்டதோடு, அவர்கள் தாக்குதலுக்குப் பாவித்த டபிள் கப் வாகனமும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது.

# ஐ.நா. செயலர் கோபி அனானின் இலங்கைக்கான விஜயம் ரத்து!

ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் தலைமைச் செயலர் கோபி அனான் இலங்கைக்கு விஜயம் செய்வதாக இருந்த திட்டத்தை கைவிட்டுள்ளார் என்று கூறப்படுகிறது.

புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் புலிகளைச் சந்திக்கலாம் என்ற சாத்தியக்கூறு தொடர்பாக எழுந்த சர்ச்சையை அடுத்து, அந்தத் திட்டம் கைவிடப்பட்டுள்ளது.

கோபி அனான் மலேசியாவில் இஸ்லாமிய நாடுகளின் உச்சிமாநாட்டில் கலந்துகொள்ளச் செல்லும் வழியில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை இலங்கையில் தங்கிச் செல்வார் என்று எதிர்பார்க்கப்பட்டது.

கோபி அனானின் இலங்கை விஜயம் தொடர்பாக கொழும்பிலுள்ள ஐக்கிய நாடுகள் சபை அலுவலகத்திலிருந்து எந்தவிதமான அதிகாரபூர்வமான பதிலும் வெளியிடப்படவில்லை.

கோபி அனான் இலங்கையில் தங்கியிருக்கும்போது புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலுள்ள வன்னிப் பிரதேசத்துக்கு விஜயம் செய்ய வேண்டுமென்று புலிகள் வேண்டுகோள் விடுத்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஆனால், அப்படியான சந்திப்பு புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளுக்கு இணையான ஸ்தானத்தை வழங்குமென்று வாதித்து, இலங்கை அரசாங்கம் ஆட்சேபனை தெரிவித்ததாக தகவல்கள் கூறுகின்றன.

# தேசியத் தலைவரின் வழிகாட்டலில் புலிகள் செயற்பட்டு தமிழ்மக்களை சர்வதேசத்திற்கு இனங்காட்டியுள்ளனர்!

## 12 மாவீரர் நினைவுக் கூட்டத்தில் பேராசிரியர் சந்திரசேகரம்

16 ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கை - இந்திய கூட்டுச் சதியால், மரணமானவர்களே குமரப்பா, புலேந்திரன் உட்பட 12 மாவீரர்கள். இந்த 16 ஆண்டுகளின் பின்னர், நமது தேசம் பல மாறுதல்களைக் கண்டுள்ளது. மாவீரர்களின் கனவுகள் நனவாகிக் கொண்டிருக்கும் முக்கியமான கால கட்டத்திலே நாம் வாழ்கின்றோம்.

இதுவரை காலமும் தமிழரின் பிரதிநிதிகள் எனக் கூறிக்கொண்டிருந்தவர்கள், மக்களை இக்கட்டுக்கு உள்ளாக்கியுள்ளார்கள். தலைவரின் வழிகாட்டலில் புலிகள் செயற்பட்டு, தமிழ்மக்களைச் சர்வதேசத்திற்கு இனங்காட்டியுள்ளனர் என, பேராசிரியர் சந்திரசேகரம் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் தீருவிலில் நடைபெற்ற குமரப்பா, புலேந்திரன் உட்பட 12 மாவீரர்களின் 16 ஆம் ஆண்டு நினைவுக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், இலங்கை என்று ஒரு நாடு உண்டு என்பதை நகரங்களில் வசிப்போரே அறிந்திருந்திருந்தனர். ஆனால், கட்டுநாயக்கவின் தாக்குதலோடு, இலங்கையின் பெயர் உலகின் மூலை முடுக்கெல்லாம் செய்தியாகச் சென்றது. புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு வயது இரண்டாகப் போகிறது. இந்தக் கால கட்டத்தில் எத்தனை போராளிகளை இழந்தோம்? மக்களின் இயல்பு வாழ்க்கையில் மாற்றம் ஏற்படவே இல்லை.

சிங்களவர், முஸ்லிம்கள் சுபட்மாக வாழவேண்டுமானால், எமது உரிமையை எம்மிடம் தரவேண்டும். இலங்கையில் வாழும் ஒவ்வொருவரும் கடனாளியாக உள்ளார்கள் கடன் சுமை கூடிய நாடாக இலங்கை உள்ளது. இலங்கையின் பொருளாதாரம் ஈடுவைக்கப்பட்டு, குட்டிச் சுவராகிவிட்டது. ரோக்கியோ மாநாட்டில் பங்குபற்றாததன்மூலம், புலிகள் பெருவெற்றி பெற்றுள்ளார்கள்.

எமது வாழ்வுரிமை உயரவேண்டுமாயின், புலிகள் பங்குபற்றும் இடைக்கால நிர்வாகம் உடனடியாக வேண்டும். உலகில் காவாலி முதலாளித்துவத்தை வளர்க்கும் நாடு, புலிகளைத் தடைசெய்வது பெரிய விடயமல்ல. மக்கள் இதனையிட்டு அலட்டிக்கொள்ளத் தேவையில்லை. எமக்கு ஒரு தலைவர் உள்ளார். அவரின் தலைமையிலேயே ஒரு படையுண்டு எனத் தெரிவித்தார்.

# முல்லைமாவட்ட வைத்தியசாலைகளுக்கு அன்புலன்ஸ் வண்டி வழங்கப்படவுள்ளது

நிக்கொட் நிறுவனத்தினரால், முல்லைமாவட்ட வைத்தியசாலைகளுக்கு அம்புலன்ஸ் வண்டிகள், ஜெனரேற்றர்கள் வழங்குவதற்குத் திட்டங்கள் தயாரித்து அனுப்பப்பட்டுள்ளதாக, முல்லை மாவட்ட பிரதிப் பணிப்பாளர் ரகுநாதபிள்ளை தெரிவித்தார்.

முல்லை வைத்தியசாலை கட்டம் I - முள்ளியவளை, நட்டாங்கண்டல் வைத்தியசாலைகளுக்கு அவசர நோயாளர்களைக் கொண்டுசெல்ல அன்புலன்ஸ் வண்டி வழங்குவதற்கும், மல்லாவி முல்லைத்தீவு கட்டம் I - முள்ளியவளை வைத்திய சாலைகளுக்கு ஜெனரேற்றர்களும் வழங்குவதற்கு முல்லை மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு மின்பிறப்பாக்கியும் வழங்குவதற்குத் திட்டங்கள் தயாரித்து அனுப்பப்பட்டுள்ளதாகவும், வெகுவிரைவில் இவற்றை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்புடுமென அவர் மேலும் தெரிவித்தார்.

# ஒரு தொகுதி அகதிகள் நெடுந்தீவு வந்தடைந்தனர்

(யாழ்ப்பாணம்)

இந்தியாவில் தங்கியிருந்த ஒரு தொகுதி ஈழ அகதிகள், சனிக்கிழமை பகல 11 மணிக்கு நெடுந்தீவை வந்தடைந்தனர்.

பதின்நான்கு குடும்பங்களைச் சேர்ந்த 31 பேரே, இவ்வாறு வந்தவர்கள் ஆவர். தமிழ்நாட்டின் ஜெகதாப்பட்டினத்திலிருந்து வெள்ளிக்கிழமை அதிகாலை இந்திய இழுவைப்படகுகளில் ஏறிய இவர்கள், சனிக்கிழமை பகல் 11 மணிக்கு நெடுந்தீவிலுள்ள பனங்காணி எனும் இடத்தை வந்தடைந்தனர்.

இந்தியப் பணத்தில் ஒருவருக்கு தலா 3000 ரூபா வீதம் கொடுத்தே, இவர்கள் இங்கு திரும்பியுள்ளனர். இவ்வாறு வந்த அனைவரும் நெடுந்தீவைச் சொந்த இடமாகக் கொண்டவர்கள். (113)

## குழாய் நீர் சேவை விஸ்தரிப்பு

புன்னாலைக்கட்டுவன் தெற்கு அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில், யுனிசெவ் நிறுவன நிதியுதவியுடன் குழாய் நீர் சேவை விஸ்தரிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இங்கு குடிநீரை மாணவர்கள் இலகுவில் பருகக்கூடிய வகையில் நீர்க் குழாய்கள் பொருத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. அத்துடன், இந்நிறுவன நிதியுதவியுடன் பாடசாலை பிரதான மண்டபமும் புனரமைத்து மாடிக்கட்டடமாகக் கட்டுவதற்கு ஏற்ற ஒழுங்குகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் தெரியவருகின்றது (83)

## புன்னாலைக்கட்டுவன்

# அ.த.க. பாடசாலையில் தரம் 9 வகுப்பு ஆரம்பம்

(புன்னாலைக்கட்டுவன்)

புன்னாலைக்கட்டுவன் தெற்கு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில், அடுத்த கல்வியாண்டு முதல், தரம் ஒன்பது வகுப்பு ஆரம்பிக்கப்படவுள்ளது. இப்பாடசாலையில் தரம் எட்டு வரையுமே வகுப்புக்கள் நடைபெற்று வந்தன. தற்போது தரம் ஒன்பது வகுப்பினை ஆரம்பிப்பதற்குரிய அனுமதியைக் கல்வித் திணைக்களம் பாடசாலை நிர்வாகத்துக்கு வழங்கியுள்ளது. இதன் முதற் கட்டமாக ஜி.ரி.இசற் நிறுவனத்தின் நிதியுதவியுடன், மூன்று வகுப்பறைகள் கொண்ட புதியதோர் கட்டடத் தொகுதியை அமைப்பதற்கான ஆரம்பக்கட்ட நடவடிக்கைகள் நடைபெற்றுவருகின்றன. (83)



அரியாலை கலைமகள் சனசமூகநிலையப் பாலர் பாடசாலை விளையாட்டுப் போட்டி, அண்மையில் நிலைய முத்தமிழ் அரங்க முன்றலில் இடம்பெற்றபோது, பாடசாலை மாணவர்கள் இறைவணக்கம் செலுத்துவதைப் படத்தில் காணலாம்.



கரவெட்டியிலுள்ள விக்னேஸ்வராக் கல்லூரி, அண்மையில் பூந்துணர் இதழ் 3, சஞ்சிகை வெளியீட்டு நிகழ்வில் - பிரதம அதிதியாக கலந்துகொண்ட வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் வே.தி. செல்வரத்தினம் அவர்களையும், சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் தாயகன் மங்கள விளக்கு ஏற்றுவதையும் காணலாம்.

## வீதி விபத்தில் வயோதிபர் காயம்

துவிச்சக்கரவண்டியில் வீதியில் சென்று கொண்டிருந்த வயோதிபர் மீது, டிராக்டர் மோதியதால், காயமடைந்த வயோதிபர்- யாழ்.போதனா வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பெற்று வருகிறார். நேற்றுமுன்தினம் மாலை 5 மணிக்குக் கல்வியங்காட்டில் நடந்த இந்த விபத்தில், சின்னத்துரை கோபால் (வயது 65) என்பவரே காயமடைந்துள்ளார்.

## சர்வதேச சிறுவர் முதியோர்தின விழா

வலிகாமம் வடக்கு பிரதேச செயலக சர்வதேச சிறுவர், முதியோர் தின விழா - நாளை புதன்கிழமை காலை 10 மணிக்குப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவிற்கு பண்டிதர் க. நாகலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். அத்தோடு, பாடசாலை மட்டத்தில் இந்த விடயம் தொடர்பாக நடாத்தப்பட்ட கவிதை, கட்டுரைப் போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்குப் பரிசுப் பொருட்களும், முதியோருக்கு அன்பளிப்புப் பொருட்களும் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதுடன், பாடசாலை மாணவர்களது கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன.

## ஓவியப் போட்டியில் முதலாம் இடம்

மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையின் மாணவனான செல்வன் அரியதவம் மனோகரன், ஓவியப் போட்டியில் மாகாண மட்டத்தில் மேல்பிரிவில் 1 ஆம் இடத்தைப் பெற்றுள்ளார். இவர இந்தப் பாடசாலையின் 2004 ஆம் ஆண்டு உயர்தர கலைப்பிரிவைச் சேர்ந்த மாணவன் என்பது குறிப்பிடத்தக்கது. (91)

# கோயில் கும்பாபிஷேகத்துக்கு படையினரால் அனுமதி மறுப்பு

அச்சுவேலி - வளலாய்ப் பகுதியில் அமைந்துள்ள காளிகோயிலில் கும்பாபிஷேகம் செய்வதற்குப் படையினர் அனுமதி மறுத்துள்ளனர்.

ஆலயங்களைப் புனரமைப்பதற்கு அனுமதிக்கப்பட்டதனைத் அடுத்து, ஆலயத்தின் புனரமைப்புப் பணிகளைத் தொடர்ந்து எதிர்வரும் மார்கழி மாதம் கும்பாபிஷேகம் செய்வதற்கு ஆலய நிர்வாகம் நடவடிக்கை மேற்கொண்டது.

இதனைத் தடுத்த படையினர் - உயர்பாதுகாப்பு வலயப் பகுதியில் கோயில் அமைந்திருப்பதனால், புனரமைப்புப் பணிகளை உடன் நிறுத்துமாறு கூறியுள்ளனர். இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து, கண்காணிப்புக் குழுவிடம் முறையிட்டதுடன், தமது விசனத்தையும் பொது மக்கள் தெரிவித்தனர்.

## ஆன்மீக நிகழ்வு

யாழ். பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையத்தில் 9 ஆம் திகதி வியாழனன்று போயா ஆன்மீக நிகழ்ச்சிகள - அதிகாலை 5 மணிக்கு நகர சங்கீர்த்தனத்துடன் ஆரம்பமாகி, நண்பகல் நாராயண சேவையுடன் நிறைவுபெறும்.


வாழ்க வளமுடன்





இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

மூன்றாவது அகவையில்



பெயர் : நி.ஜிதுர்சிகன்
முகவரி : 444, 5 ஆம் யூனிட், இராமநாதபுரம்.



ஆறாவது அகவையில்

பெயர் : பா.இந்துஷா
முகவரி : மாதகல் வடக்கு, மாதகல்.

எட்டாவது அகவையில்



பெயர் : இ.சதுஸ்னா
முகவரி : சிவன்கோவிலடி, சாவக்சேரி.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------------------

முகவரி :------------------------------------

பிறந்த ஆண்டு:------------------------------------



கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

------------------
பெற்றார் ஒப்பம்

# மீனம்மா மீனம்மா

கடல் மீன்கள் உணவுக்கு மட்டும் பயன்படுவதில்லை. உலகளாவிய ரீதியில் 20 மில்லியன் மீனினங்கள் மிகவும் கண்ணைக் கவரக்கூடியதாகவும், மிகவும் அழகாகவும் இருப்பதாக அறியப்பட்டுள்ளது. தற்போது இப்படியான



விலைமதிப்பற்ற மீனினங்களைப் பாதுகாக்கவேண்டிய பொறுப்பை ஐ.நா எடுத்துக்கொண்டிருக்கிறது.


இந்த மீனினங்களைக்கொண்டு - கரையோர ஏழைக் கிராமங்களை வாழவைப்பதற்கான முயற்சிகளை ஐ.நா மேற்கொண்டுவருகிறது.

அவுஸ்திரேலிய நாட்டுக் கடல்களில் காணப்படும் 'அனொமென்' மீனினங்கள் மிகவும் விலைமதிப்புடையவை. அதே போல இந்தோனேசியாவின் கரிகுயின்டஸ்க் மீனினங்கள் மிகவும் பிரசித்திபெற்றவை. இந்த மீனினங்கள் விற்பனையில் ஐரோப்பிய நாடுகளும், அமெரிக்காவுமே நன்கு உழைக்கின்றன. அமெரிக்காவில் மட்டும் 1471 மீனினங்கள் இருக்கின்றன. அதிலும் சபையர் டெவில், கொப்பர்கெட் பட்டர்பிளை ஆகியன அற்புதமானவை. இந்த மீனினங்கள்




மூலம் தென்கிழக்காசிய நாடுகளினது வருட வருமானம் 2300 மில்லியன் அமெரிக்க டொலர் ஆகும்.

மாலைதீவுகளிலும் மற்றும் இலங்கையிலும் இந்த மீனினங்களின் விற்பனை அமோகமாகவுள்ளது. ஆனால், இந்தோனேசியா போன்ற நாடுகளில் மீன்களைப் பிடிப்பதற்கு நஞ்சு பாவிக்கப்படுவதால், அழகிய மீனினங்களும் இறப்பதற்கு வாய்ப்பாகின்றது. இலங்கையைப் பொறுத்தவரையில், அரசாங்கம் நன்னீர் மீன்வளர்ப்புக்கு ஊக்கம் கொடுப்பதனால், நல்ல வருமானம் பெறக்கூடியதாக உள்ளது. மீன்கள் சாப்பாட்டுக்கு மட்டுமல்ல, வருமானத்துக்கும்தான்.



# இராட்சத ஆமை

எரிமலைகள் வெடிக்கும்பொழுது, அதன்மூலம் கிடைக்கின்ற நன்மைகளினைவிட தீமைகள்தான் அதிகமாக இருக்கின்றது. கலபாஜஸ் தீவுகளில் காணப்படுகின்ற அல்கெடோ எரிமலைகள் மூலம் DNA இனது தாக்கம் அதிகம் இருப்பதாக அறியப்பட்டிருக்கின்றது. இதன் காரணமாக அங்கே காணப்படுகின்ற ஆமைகள் இராட்சதத்தனமாகக் காணப்படுகின்றன. இதற்குக் காரணம் - எரிமலை வெடிப்பதனால்




ஏற்பட்ட தாக்கம் ஆமைகளின் உடலில் காணப்படுகின்ற பரம்பரை அலகுகளில் (DNA) மாற்றத்தினைக் கொண்டுவந்தமையேயாகும்.

ஏறக்குறைய 3000 தொடக்கம் 5000 ஆமைகள் இப்படி இராட்சதத்தனமாக இருப்பது கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றது. ஏறக்குறைய ஒவ்வொரு ஆமையும் 300 கிலோ நிறை கொண்டதாகக் காணப்படுகின்றது. கடந்த நூற்றாண்டில் பல ஆமை கள் அவற்றினது அட்டகாசம் தாங்கமுடியாது அரசாங் கத்தினால் கொல்லப்பட்டன.

இந்த ஆமைகள் எரிமலையடிவாரத்தில்தான் வசிக்கின்றன. இவை கிட்டத்தட்ட 100,000 வருடங்களாக வசித்து வருவதாக ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன. ஆனால், தொடர்ச்சியாக இவை அழிக்கப்படுவதில்லை. இவற்றின் இனம் அழிந்துபோக வாய்ப்பிருப்பதாகக் கூறப்படுகின்றது. ஆனாலும், இவற்றின் இராட்சதத்தன்மை எப்பொழுதும் ஆபத்துத்தான்.

# காந்த நாணயம்



ஒவ்வொரு நாட்டிலும் புழக்கத்திலுள்ள நாணயங்கள் பெரும்பாலும் வெள்ளி, ஐம்பொன், செப்பு ஆகிய உலோகங்களால் தயாரிக்கப்படுகின்றன. இரும்பை மட்டுமே காந்தமாக்கமுடியும் மற்ற உலோகங்களை காந்தமாக்கமுடியாது என்ற தத்துவம் இருக்கின்றது. ஆனால், நாணயங்களை ஓரளவுக்கு காந்தமாக்கமுடியும். என்ற முடிவுக்கு விஞ்ஞானிகள் வந்திருக்கிறார்கள். நாணயங்களை ஒன்றன்மேல் ஒன்றாக அடுக்கி வைத்துவிட்டு, அதற்குமேல் செப்புக்கம்பிச் சுருளைச் சுற்றிவிட்டு 12,000 வோல்ட் மின்சாரத்தினைச் செலுத்தும்போது - அந்தநாணயங்கள் ஓரளவு காந்தமாகக் கூடியதாக இருக்கின்றன. இதன் காரணமாக நாணயத்தின் உறுதி அதாவது அது தயாரிக்கப்படுகின்ற பதார்த்தத்தின் உறுதி கூடுகின்றது. ஆகவே தற்போது நாணயங்களை ஓரளவு காந்தமாக்கும் முயற்சியில் விஞ்ஞானிகள் ஈடுபட்டுவருகின்றார்கள்.




# வெற்றிகரமான வெளியேற்றம்

பராசூட் என்பது உண்மையில் உயிர்காக்கும் கருவிதான். விமானத்தில் ஏதேனும் கோளாறு என்றால் விமானத்திலிருந்து தப்புவதற்கு பராசூட்கள் இருந்தாலும், அதனை எடுத்துக்கொண்டு குதிப்பது என்பது ஒரு சிக்கலான விடயம்தான். இதன் காரணமாக எத்தனையோ பேர் இறந்திருக்கிறார்கள்.


ஆனால் தற்போது பராசூட் இயக்கத்தில் ஒரு புதிய பரிமாணம் மிளிர்கின்றது. பெரும்பாலும் விமானம் ஒன்று விபத்தாகப் போகின்றது என்றால், அதில் பயணம் செய்பவர்களைத் தப்பவைப்பதுதான் முதல் வேலை. இதன் காரணமாக விமான ஓட்டிகள் தப்புவது மிக அரிதாகக் காணப்படுகின்றது. தற்போது விமான ஓட்டிகளுக்கான இருக்கைகள் பராசூட்டுடன் காணப்படுகின்றன. இதன்



மூலம் - அவர்கள் இறுதியாக வெளியேறுவது சுலபமாகின்றது. முதலாம் உலக யுத்தத்தின் போது பராசூட் மூலம் வெளியேற முடியாது விமான ஓட்டிகள் பெருமளவில் இறந்தனர். இதன் காரணமாக 1942ம் ஆண்டில் முதன்முதலில் இது கண்டறியப்பட்டது. இரண்டாம் உலக யுத்தத்தின் போது - பெரும்பாலும் இப்படியான இருக்கைகள் பயன்படுத்தப்பட்டாலும், நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய இருக்கைகள் இப்போதுதான் பாவிக்கப்படுகின்றன. காலப்போக்கில் இது எல்லாவகையான விமானங்களுக்கும் வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

# திருந்தும் U.S.A

முதலாளித்துவப் பொருளாதார உலகில் கொடிகட்டிப் பறந்து கொண்டிருக்கின்ற அமெரிக்கா, இப்போது தொழிற்சாலைகளினால் நிரம்பிவழிகின்ற அதனுடைய ஒரு நகரமாகிய சிக்காக்கோ - தொழிற்சாலைக் கழிவுப்புகைகளால் சூழப்பட்டிருக்கின்றன. இதன் காரணமாக அப்பிள், ஆரஞ்சு ஆகியவற்றின் விளைச்சலில் இதனுடைய தாக்கம் தெரிகின்றது. இதனைத் தடுக்கவேண்டும் என்ற நோக்கம் பல தரப்பட்ட நிறுவனங்களுக்கு ஏற்பட்டாலும், பூனைக்கு யார் மணி கட்டுவது என்ற பிரச்சினையிருந்தது.



தற்போது 22 கம்பனிகள் இந்த பச்சைவீட்டு விளைவு மூலம் ஏற்படக்கூடிய தீமைகளைத் தடுப்பதற்குப் புறப்பட்டுள்ளன. அதில் என்ன சிறப்பம்சம் என்றால், உலகின் தலைசிறந்த நிறுவனங்களாகிய போர்ட் மற்றும் மோட்டோரோலா ஆகியன இணைந்திருப்பதாகும். சூழலைப் பாதுகாக்கவேண்டும் என்ற நோக்கம் அமெரிக்கா போன்ற ஏகாதிபத்திய நாடுகளுக்கு வந்திருப்பது வரவேற்கத் தக்கது.

# ஞாபகம்



ஞாபகசக்தி என்பது மனிதனுக்கு மிகவும் முக்கியமானது. சிலர் தம்முடைய ஞாபகசக்தியைப்பற்றிக் கவலைப் பட்டுக் கொண்டேயிருக்கின்றார்கள். குறிப்பாக, பாடசாலை மாணவர்கள் தம்முடைய ஞாபகசக்தியைப் பற்றிக் கவலைப்படாத நாளே இல்லை.

ஆனால், சிலருடைய ஞாபகசக்தி எம்மை ஆச்சரியப்பட வைத்திருக்கின்றது. அன்டிபெல் என்பவர் 20 நிமிடங்களில் 520 சீட்டுகளை ஒழுங்காக அடுக்கி வைத்துவிட்டு, அதனையொரு ஒழுங்கில் சொல்கின்றார்.

இவர் 2002 ஆம் ஆண்டு நடைபெற்று முடிந்த உலக ஞாபகசக்திப் போட்டியில் கலந்துகொண்டார். இவருடைய ஞாபகசக்தி உண்மையில் லண்டன் மாநகரத்துக்கு ஒரு பெருமையாக இருக்கின்றது. இவரிடம் இவருடைய அதீதமான ஞாபகசக்தியைப் பற்றிக்கேட்டபோது, அது தன்னுடைய தொடர்ச்சியான அனுபவத்தினால் வந்தது என்று கூறுகின்றார். தான் ஒன்றினையும் பாடமாக்குவதில்லை, ஒரு ஒழுங்கில் தொகுக்கின்றேன் என்று சொல்கின்றார். உதாரணமாக-லண்டன் மாநகரத்தின் பல இடங்களைச் சுற்றிப்பார்த்துவிட்டு, பார்த்த இடங்களைத் தொடர்ச்சியாக ஞாபகத்தில் வைப்பது இவருடைய பொழுதுபோக்கு. மற்றையது கேட்கின்ற ஒலிகளையெல்லாம் ஞாபகப்படுத்தித் தொடர்ச்சியாக நினைவில் வைத்திருப்பது.

இப்படியான பயிற்சிகள் எல்லாம் ஞாபகசக்தியை வளர்ப்பதற்கான வழிமுறைகளாகும். இந்த முறைகள் எல்லாம் கி.மு 500 அளவில் கிரேக்க நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்டன. மூளையில் காணப்படுகின்ற கலங்கள் யாவும் சிக்கலானவை. அவையொரு ஒழுங்கான வலையமைப்பாக வுள்ளன.

ஞாபகசக்தியானது மீளக்கொண்டுவரமுடியும் எனின், அதுதான் இதனுடைய சிறப்பம்சமாகும். இந்த ஞாபகசக்திக்குப் பொறுப்பான கலங்கள் நியூரோன்கள் என அழைக்கப்படுகின்றன. ஏறக்குறைய 100 பில்லியன் கலங்கள் காணப்படுகின்றன. சிக்கலான விடயங்களை ஞாபகசக்திக்குக் கொண்டுவருவதிலும் பார்க்க - இலகுவான, தெரிந்த விடயங்களை ஞாபகசக்திக்குக் கொண்டுவருவது மிகவும் சுலபமாக இருக்கின்றது. ஞாபகசக்தியைக் கொண்டுவர சிறுவர்கள் இந்த வழிமுறைகளைப் பின்பற்றவேண்டும்.

# விதம் விதமான இறக்கைகள்

விமானங்களின் இறக்கைகள் எல்லாம் ஒரேபோலல்லாது, வித்தியாசமாகக் காணப்படுகின்றன. நாரை போன்ற கடற்பறவை எவ்வாறு தன்னுடைய இறக்கைகளைப் பயன்படுத்தி கடலிலும், தரையிலும் இறங்குகின்றது என்று பார்த்தோமானால், பல நுட்பங்களைக் காணக்கூடியதாக இருக்கும். இந்தப் பறவை தனது வாலைப் பாவிப்பதில்லை. முழுமையாகத் தன்னுடைய இறக்கைகளையே பாவிப்பது இதனுடைய தனியம்சம். பறப்பதற்கு இறக்கைகள் போதுமானவை.



ஆனால், திரும்புவதற்கு இறக்கைகள் மட்டும் போதாது. வாலும் தேவையாக இருக்கின்றது. பறக்கும்போது காணப்படும் புவியீர்ப்புமையத்துக்கும், திரும்பும்போது காணப்படும் புவியீர்ப்பு மையத்தில் வேறுபாடுகள் உண்டு. இந்தப் பறவையின் அமைப்பினை ஒத்ததே அமெரிக்காவின் F - 16 யுத்தவிமானம். ஆரம்பகாலத்தில் விமானங்களுக்கான வடிவமைப்பின் ஆரம்பகர்த்தாக்களாக பறவைகளே இருந்தாலும்கூட, தற்போதும் பறவைகளை வைத்தே புதிய வகையான விமானங்கள் கண்டு பிடிக்கப்படுவதாகக் கண்டு பிடிப்பாளர்கள் ஒத்துக் கொள்கிறார்கள். பறவைகள் காற்றில் பறப்பதற்கும், மீன்கள் கடலில் நீந்துவதற்கும் நிறையவே வேறுபாடுகள் உண்டு. காற்றின் அமைப்பு, அதனுடைய தன்மை ஆகியன விமானங்களின் இறக்கைகளின் அமைப்புடன் சேர்ந்து, விதம் விதமான சாகசங்களைச் செய்கின்றது. ஆனால், தற்போது கடலில் நீந்தும் மீன்கள்போல, சில விமானங்கள் இருப்பதனைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

குறிப்பாக, அமெரிக்க யுத்த விமானம் F - 18 செய்கின்ற சாகசங்கள், மீன்களினுடைய நீச்சலை ஒத்தது. மீன்களின் இறக்கைகள் மிகவும் மெல்லியதாகவும், நன்கு திரும்பக் கூடியதாகவுமுள்ளது. அதேபோலதான், விமானங்களுடைய இறக்கைகளும் தேவைக்கேற்றவாறு அதனுடைய அமைப்பினை மாற்றக்கூடியவாறுள்ளதால், சாகசங்கள் நிகழ்த்துவது இலகுவாகின்றது.

# ராஜாளி ராஜா


அரபு நாடுகள் என்று சொன்னாலே, எங்கள் கண்முன்னே வந்து நிற்பது வல்லூறு அல்லது ராஜாளி என்று அழைக்கப்படுகின்ற பறவைதான். அரபுநாடுகளின் ராஜா - இந்தப் பறவையாக இப்போது இருக்கிறது. டுபாய் நாட்டில் இந்தப் பறவைகள் மருத்துவத் தேவைகளுக்குப் பயன்படுத்தப்படுகின்றன. தற்போது இநதப் பறவைகள் ஏறக்குறைய 40,000 அமெரிக்க டொலர்கள்வரை விலை போகின்றன. இதன் காரணமாக இந்தப் பறவைகளை வளர்ப்பவர்கள், இதனை ஒரு தொழில்ரீதியாகவே வளர்ப்பதனைக் காணக்கூடியதாக இருக்கிறது. மனிதனுக்கு ஏற்படும் நோய்களே அநேகமாக இந்த ராஜாளிகளிற்கும் ஏற்படுகின்றன. ஆகவே, அரபுநாட்டு மக்கள் தாங்கள் எடுக்கின்ற மருந்துகளை எல்லாம் தாங்கள் வைத்திருக்கின்ற ராஜாளியிடம்தான் பரீட்சித்துப் பார்ப்பது வழக்கம். இந்தப் பறவைகள் டுபாய் வைத்தியசாலையிலும் பிரபலமாக இருக்கின்றது. 1983 ஆம் ஆண்டு, டுபாய் வைத்தியசாலையானது இந்த ராஜாளி சிகிச்சையினை உத்தியோகபூர்வமாக அறிவித்து, அங்கீகரித்து இருக்கிறது. தற்போது HIV நோய்க்குரிய சிகிச்சையில், ராஜாளிகள் அரபு நாடுகளில் ஈடுபடுத்தப்படுகின்றன. இது மிகவும் விலைகூடிய சிகிச்சையாக இருந்தாலும், இதன்மூலம் மனித உயிர்கள் மட்டுமல்ல, பெறுமதி வாய்ந்த ராஜாளிகளும் காப்பாற்றப்படுகின்றன.



இதன் காரணமாக ராஜாளிக் குஞ்சுகள் பெரும்பாலும் நோய்களினால் பீடிக்கப்படும்போது, அவை முளையிலேயே மருந்தூட்டப்படுவதினால் தப்புகின்றன. இந்த மருத்துவ முறை நேற்று இன்று தொடங்கியதல்ல, இரு ஒரு தசாப்தகாலமாக இடம்பெற்று வருகிறது. ஆனால், இந்தச் சிகிச்சை முறையில் சில தீமைகளும் இருக்கின்றன. அதிலும், பக்க விளைவுகள் அதிகமாக இந்தச் சிகிச்சைமுறையில் காணப்படுகின்றது. ஆனாலும், அரபு மக்கள் இதனை விடுவதாக இல்லை.

# புதியவகை T.V க்கள்

தொலைக்காட்சிப் பெட்டியில்லாத வீட்டில் குடியிருக்கவேண்டாம் என்பது புதுமொழி. தற்போது விதம்விதமான நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய T.Vக்கள் சந்தையை ஆக்கிரமிக்கத் தொடங்கியிருக்கின்றன. அதிலும் கிற்றாச்சி, டொசிபா, சொனி ஆகியன ஏட்டிக்குப்போட்டியாகப் புதிய புதிய தொழில்நுட்பங்களை வாரி வழங்கிக்கொண்டிருக்கின்றன. அண்மையில் வந்த தட்டையான திரையையுடைய T.V இல் நிறைய புதிய அம்சங்களைக் காணக்கூடியதாக இருக்கின்றது. அதிலே காணப்படுகின்ற டிஜிற்றல் கேபிள் முறை மற்றும் கதோட்டுக்குழாய், சிலிக்கன் திரவம், கிறிஸ்டல் வெளிக்காட்டி, டிஜிற்றல் ஒளியமைப்பு மற்றும் ஒலியமைப்பு பிரமிக்க வைக்கக்கூடியதாக இருக்கின்றது. இவையெல்லாம் கட்டுபடியான செலவில் ஒரு அறைக்குள்ளேயே கிடைக்கும்போது சந்தோஷமாகத்தான் இருக்கிறது. கதோட்டுக்குழாயானது மூன்று நிறக்கதிர்களை வில்லையினூடு முறிய விடுகிறது. அவை சிவப்பு, பச்சை மற்றும் நீலம் ஆகும். இவை பின்பு, சிலிக்கன் திரவத்தின்மூலம் விம்பமாக்கப்படுகின்றன. படங்களைத் திரையில் விழுத்தும் தொழிற்பாட்டைச் செய்வது கிறிஸ்டல் திரவமாகும். இதன்மூலம் கிடைக்கப்பெற்ற விம்பங்கள் யாவும் திரையில் விழுகின்றன. மேற்கூறப்பட்ட விடயங்கள் சாதாரண தொலைக்காட்சிகளிலும் கிடைக்கக் கூடியதாக இருக்கும். ஆனால், டிஜிற்றல் ஒளியமைப்பு என்று சொ[illegible]க் கூடிய விம்பங்களின் துல்லியமும், ஒரு புதிய விடயமாகத்தான் இருக்கின்றது. டிஜிற்றல் ஒலியமைப்பைச் சினிமாத் திரையரங்குகளில் மட்டுமே கேட்டு மகிழ்ந்த மக்கள், இப்போது தங்கள் வீடுகளிலேயே கேட்டுமகிழ்கின்றார்கள். கிற்றாச்சி- 2300 $, மிற்சுமிசி - 55,000 $, டொசிபா - 5,000 $, பனசொனிக் 3,000 $ சொனி- 7000 $, சாம்சங் 3,500 $ விலைகளில் கிடைக்கின்றன. இனி வீடு தியேட்டர்தான்.



## திரை விமர்சனம்


# வின்னர்



பல நாட்களாகப் பிரசாந் படம் இல்லையே என ஏங்கிய ரசிகர்களுக்கு, இன்ப அதிர்ச்சியாக இந்தப் படம் இருக்கிறது. வெல்கம் பிரசாந். தாத்தா, பாட்டி இருக்கும் சொந்தக் கிராமத்துக்குப் போகும் பிரசாந், அங்கே கிரணிடம் காதல் கொள்கிறார். பெண்ணைப் பெற்றவர்களுக்கு விடயம் தெரியவர, காதலனிடமிருந்து காதலியைப் பிரிக்கின்றார்கள். பின்பு தமிழ் சினிமா மசாலாப் பொடிப்படி, பிரசாந் காதலி வீட்டுக்குப் போகிறார். அங்கே அடிதடி, சண்டை. இதன்பிறகுதான் போனகாரியத்தை முடிக கிறார். இயக்குநர் சுந்தர் - சி படம் என்பதால், அவருடைய பழைய பல்லவி அப்படியே தெரிகிறது. படத்திற்கு வடிவேலினுடைய வெடிச்சிரிப்பு குளுக் கோஷ். கிரண் தனது குண்டான உடலைத் தூக்கி ஓடமுடியாமல் காதல் காட்சிகளில் கஷ்டப்பட்டு நடித்திருக்கிறார். கிரணின் அப்பா தெலுங்கு இறக்குமதி. அவருடன், பழைய கவர்ச்சி நடிகை அனுராதா, சண்டைப் பயிற்சி தளபதி தினேஸ் படத்தில் எல்லோருமே பறந்து பறந்து அடிவாங்குகிறார்கள். ஒளிப்பதிவு - படத்திற்கு வாய்க்கவில்லை. இசை அமைப்பாளர் யுவன்சங்கர் ராஜா பெரிதாக ஒன்றும் செய்தது போல் தெரியவில்லை.

- சுதர்சுஷி.

# வாரம் ஒரு யோகாசனம்



## பார்சிவோத்தாசனம்

முதல்நிலையாக நிமிர்ந்து நிற்க வேண்டும். இரண்டாம் நிலையாக இரண்டு கால்களையும் 21/2 அடி அகலத்திற்கு அகட்டவேண்டும். மூக்கின் வழியாகச் சுத்தமான காற்றை இழுக்க வேண்டும். பின்புறமாகக் கைகளைப் பின்னிக்கொள்ள வேண்டும். மூச்சை வெளிவிட்டவாறு, இடது பக்கம் குனிந்து, முகத்தை இடது முழங்காலின்மீது முட்ட வேண்டும். இவ்வாறு செய்யும்போது, இரண்டு கால்களும் சற்றும் வளையக்கூடாது. பின்னர், வலது பக்கம் முழங்காலில் தலை முட்டவேண்டும். இடது பக்கம் 10 தடவை, வலது பக்கம் 10 தடவை மாறிமாறிச் செய்யவேண்டும்.


### நன்மைகள்

முதுகு, மார்பு போன்ற பகுதிகளில் வரக்கூடிய வலிகள் எத்தன்மையாகவிருந்தாலும் குணமாக்கும். உடல் அலர்ஜி, திமிர்வாதம் உடலில் தொற்றுகின்ற குத்தல், குடைச்சல், தலைவலி, மூச்சடைப்பு, அஜீரணக்கோளாறு போன்றவற்றையும் நீக்கும். நீரழிவு, பாரிசவாதம் இவற்றையும் வராதபடி தடுக்கும். பெண்களுக்கு மாதவிடாய்க் கோளாறுகள் நீங்கும். சுகப்பிரவசம் உண்டாகும்.

பெருந்தொந்தி, சிறுதொந்தி குறையும், வயிறு இறுகும், மலட்டுத்தன்மை நீங்கும், ஞாபகசக்தி அதிகமாகும், சிறுநீரகக் கோளாறு நீங்கும், முகம் கவர்ச்சிபெறும், இளமையைக் கொடுக்கும்.

*தருபவர் - மா.மகாநேசன், கல்லுவம்*

# புகை அடையாளம்




கையடக்க தொலைபேசிகள் ஒரு தகவல் தொடர்புசாதனம் என்ற நிலையிலிருந்து, பல தரப்பட்ட தேவைகளுக்குப் பயன்படத் தொடங்கியிருக்கின்றன.

தற்போது இந்தக் கையடக்கத் தொலைபேசிகள்- சூழல் பாதுகாப்பிற்கான ஒரு வேலையைச் செய்யத்தொடங்கியிருக்கின்றன. கையடக்கத் தொலைபேசிகளில் காணப்படும் மின்கல அமைப்பு - சூழலில் காணப்படும் நெருப்பு, புகையினை அடையாளங்கண்டு, எச்சரிக்கை ஒலியெழுப்பக்கூடியவாறு அமைக்கப்பட்டிருக்கின்றன. அண்மையில், பிரான்ஸ் நாட்டில் ஏற்பட்ட ரயில் விபத்துக்குப் பின்புதான், இந்தக் கண்டுபிடிப்பு முக்கியத்துவம் பெற்றிருக்கின்றது. இது ஒரு தீயறி கருவியாகவும் பயன்படுகின்றது. இதனைக் கண்டுபிடித்ததில் உரோமானியர்கள் பெருமையடைகின்றார்கள். இது தன்னிச்சையாக ஒரு எச்சரிக்கை ஒலியையும் மற்றும் வெளிச்சத்தையும் ஏற்படுகின்றது. எப்பொழுதும் கையடக்கத் தொலைபேசிகளில் இருக்கின்ற மின்கலம் முழுமையாக இயங்கிக் கொண்டிருக்கவேண்டும். இல்லாவிட்டால், இந்த எச்சரிக்கை ஒலி அமைப்பு இயங்காது தடைப்பட்டுவிடும். நெருப்பு, புகைகளில் காணப்படுகின்ற மெதேன், எதேன் போன்ற வாயுக்கள் -இந்த இலத்திரனியல் முறையை ஊக்குவிக்கின்றன. ஆனாலும், அளவுக்கதிகமாக இந்த வாயுக்களின் தாக்கம் இருக்கும்பொழுது, கையடக்கத் தொலைபேசியின் மத்திய செயற்பாடு அமைப்பு தடைப்பட வாய்ப்பிருக்கின்றது. தற்போது கனடா நாட்டு கையடக்கத் தொலைபேசி நிபுணர்களும் இதற்கு ஊக்குவிக்கக் கூடியவர்களாக இருக்கின்றார்கள். தற்போது கையடக்கத் தொலைபேசிகள் உலகில் முடிசூடா ராஜாக்களாகிய மோட்டோரோலா, நொக்கியா, சீமன்ஸ், சொனி எரிக்சன் ஆகிய கொம்பனிகள் இந்தத் தொழில்நுட்பத்தினைப் புகுத்தி, வெற்றியும் கண்டுள்ளார்கள். ஆனால், நொக்கியா நிறுவனம் இதன்மூலம் அதியுன்னத புகழையடைந்திருக்கிறது. அதன் விற்பனையும் அதிகரிக்கின்றது.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

*நயனொடு நன்றிபுரிந்த பயனுடையார்*
*பண்புபா ராட்டும் உலகு.* -திருக்குறள்.

## நமது நோக்கு

# அரசு அனுமதி மறுப்பு; அனானின் விஜயம் ரத்து

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் கோபி அனானின், இலங்கை விஜயம் ரத்துச் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. இவர் எதிர்வரும் பத்தாம் திகதி இலங்கைக்கு வருகை தருவதாக, முன்னர் திட்டமிடப்பட்டிருந்தது. இப்போது அவரது விஜயம் குறிப்பிட்ட பிரகாரம் நடைபெறப்போவதில்லை என அறியவந்துள்ளது.

அனானின் விஜயம் ரத்துச் செய்யப்பட்டுள்ளதா அல்லது மீண்டும் ஒத்திவைக்கப்பட்டுள்ளதா என்பது குறித்து, இன்னமும் உறுதியாகத் தெரியவில்லை.

ஆனால், அவரது விஜயம் தற்காலிகமாகவேனும் ரத்துச் செய்யப்பட்டமைக்குரிய காரணம், அவர் தனது விஜயத்தின் போது, வன்னிக்குச் சென்று, விடுதலைப் புலிகளையும், போரினால் பாதிக்கப்பட்டு அவலவாழ்வினை வாழ்ந்து கொண்டிருக்கும், தமிழ்மக்களையும் சந்திக்க விரும்பியமைதான் என்றும் அறியவந்துள்ளது.

அனான் விடுதலைப் புலிகளையோ, தமிழ்மக்களையோ வன்னி சென்று சந்தித்துப் பேசுவதை அரசாங்கம் விரும்பாத காரணத்தால், அதற்கு அரசு அனுமதிவழங்க மறுத்துவிட்டது என்றும் கூறப்படுகிறது.

ஏற்கனவே, கோபி அனான் கடந்த பெப்ரவரி இறுதிவாக்கில் இலங்கைக்கு விஜயம் செய்வதாகத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அப்போது ஈராக் மீதான அமெரிக்காவின் யுத்த அச்சுறுத்தல் உலகின்மையப் பிரச்சினையாக உருவெடுத்திருந்தமையால், மத்திய கிழக்கு நெருக்கடி அவரை வேறெந்த நடவடிக்கையிலும் கவனக்குவிவை ஏற்படுத்த முடியாது தடுத்துவிட்டது. இந்த இக்கட்டான நிலையில் அப்போது இலங்கைக்கான அவரது திட்டமிட்ட விஜயத்தை மேற்கொள்ள முடியாதநிலை ஏற்பட்டது. இதன் காரணமாக, அவரது முதல் விஜயமுயற்சி, ஒத்திவைக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

தற்போது ஈராக் விவகாரம் ஓரளவு தணிந்துள்ள நிலையில், அனானின் இலங்கைக்கான விஜயம் குறித்து மீண்டும் திட்டங்கள் போடப்பட்டன, நாளும் குறிக்கப்பட்டது.

இந்த நிலையில் இலங்கைக்கு விஜயம் செய்யவிருந்த கோபி அனானை - தமிழ்மக்களின் தலைமையும், மக்களும் வன்னி மண்ணிற்கு வரவேற்கக் காத்திருப்பதாக விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் அறிவித்து அழைப்பொன்றையும் விடுத்தார்.

தமிழ்ச்செல்வனின் அழைப்புக் குறித்து, அனான் ஆலோசனை செய்ததுடன், இலங்கை இனவிவகாரம் தொடர்பான சமாதான முயற்சிகளின் ஏற்பாட்டாளரான நோர்வேயிடம் இது குறித்து, ஆலோசனை கோரப்பட்டதாகவும், இதற்கு நோர்வே சாதகமாகவே பதிலளித்ததாகவும், ஐக்கிய நாடுகள் சபை வட்டாரங்கள் தெரிவித்திருந்தன.

ஐ.நா. சபைச் செயலாளர் நாயகத்தின் வன்னிக்கான விஜயம் - தற்போதைய சமாதான முன்னெடுப்புகளுக்கு மேலும் வலிமையையும், நம்பிக்கையையும் ஏற்படுத்துமென அவர்கள் கருதியாகவும் தெரிகிறது. அனானின் வன்னிக்கான விஜயம் தமிழ்மக்களின் அவலங்களை நேரில் பார்க்கவும், அவர்களின் அபிலாஷைகளை அவர்களுடன் பேசியுணர்ந்து கொள்ளவும். அவர்களின் தாயக மண்ணில் சிறிலங்கா அரசும் - படைகளும் சமாதானத்திற்கான யுத்தம் என்ற பெயரில், ஆடிய ஊழிக் கூத்தின் அனர்த்தங்களை நேரில் கண்டுணரவும் வாய்ப்பாக அமைவதுடன், நியாயமான, தீர்க்கமான, அரசியற்தீர்வொன்றை எட்டுவதற்காக தற்போது சர்வதேச சமூகம் மேற்கொண்டு வரும் சமாதான முயற்சிகளுக்கு ஐ.நாவின் முழுமையான ஆதரவைப் பெற்றுக்கொள்ளவும்; வழிவகுக்குமென நம்பப்பட்டது.

தமிழீழத் தேசியத் தலைவரை வன்னி சென்று ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் சந்தித்தால், அது விடுதலைப் புலிகளுக்குக் கிடைத்த பெரும் சர்வதேச அங்கீகாரமாகிவிடும் எனப் பேரினவாதிகள் அஞ்சியிருக்கக்கூடும்.

வன்னிசென்று அவர் தமிழ்மக்களைச் சந்தித்துப் பேசி, அவர்களின் துயரை அறியநேர்ந்தால், சிங்கள அரசுகள் இதுவரை காலமும் மூடிமறைத்து, உலக சமூகத்திற்குத் தெரியாது வைத்திருந்த பௌத்த - சிங்கள இனவாதக் கொடுமைகளின் கொடூரத்தை அவர் புரிந்து கொண்டுவிடுவார் எனவும் அவர்கள் பீதியடைந்திருக்கவும் கூடும்.

ஏற்கனவே, சமாதான சூழலைப் பயன்படுத்தி வன்னி நோக்கிய தமது விஜயங்களை தொடர்ந்து மேற்கொண்டுவரும் சர்வதேச இராஜதந்திரிகள், சர்வதேச அரச மற்றும் அரச சார்பற்ற அமைப்புகளின் பிரமுகர்கள், அதிகாரிகள், பல்வேறு நாடுகளின் அமைச்சர்கள், விடுதலைப் புலிகளுடனும், தமிழ் மக்களுடனும் மனம்விட்டுப் பேசி உண்மை நிலவரங்களை அறிந்து அதற்கேற்ப சமாதான நகர்வுகளின்போது, விடுதலைப் புலிகள் முன்வைக்கும் கோரிக்கைகளின் நியாயத் தன்மையைப் புரிந்துகொண்டு தமிழ்மக்களுக்கு சார்பான கருத்து நிலைப்பாடுகளை எடுக்கவேண்டிய நிலைக்குட்பட்டு வருவதால், அனானின் விஜயம் அதற்கு மேலும் வலுவூட்டவே செய்யும் எனவும், பேரினவாதிகள் குழப்பமடைந்திருக்கக்கூடும்.

அனானின் வருகையை அரசு தனக்கு சாதகமானதாகவே பயன்படுத்த முனைப்புக்காட்டி வந்ததால், விடுதலைப் புலிகளின் தலைமையை சந்திக்கவும் தமிழ்மக்களின் நிலைமைகளை யதார்த்தபூர்வமாக உணரவும் வாய்ப்பளிப்பது, தமது அரசியல் சுயநல நகர்வுகளுக்கு ஆபத்தாக அமையும் என, அரசு பயந்திருப்பதும் வெளிப்படையாகவே தெரிகிறது.

எனவேதான், உண்மையை உலகறிந்து கொள்வதைத் தவிர்த்துக்கொள்ள நினைக்கும் சிறிலங்காவின் பேரினவாதிகள் அரசு, அனானின் வன்னி விஜயத்திற்கு அனுமதி மறுத்ததன் மூலம் அவரது இலங்கைக்கான விஜயத்தை ஒத்திவைக்கவோ, ரத்துச் செய்யவோ வேண்டிய நிலையை ஏற்படுத்தியுள்ளது.

இந்த நிகழ்வானது தமிழ்மக்கள் குறித்த - தமிழ் தலைமை குறித்த விடயத்தில் மட்டுமல்ல, சமாதானம் குறித்த விடயங்களிலும் கூட அரசு பொய்மையைப் பேணவே விரும்புகிறது என்பதை வெளிப்படுத்துவதாக உள்ளது. அனானின் விஜயம் ரத்துச் செய்யப்பட்டமையானது, அரசிற்கு கிடைத்த ஒரு தோல்வியாக மட்டுமல்ல, அரசின் சமாதானம் குறித்த அணுகுமுறை நேர்மை குறித்த சந்தேகத்தை உறுதிப்படுத்துவதாகவும் உள்ளது.

## நாடும் நடப்பும்




# இலங்கை - பாகிஸ்தான் நாடுகளிடையே விரைவில் சுதந்திர வர்த்தக ஒப்பந்தம்

## உயர்மட்டக்குழு பேச்சுநடத்த வரவுள்ளது

(கொழும்பு)

இலங்கை - பாகிஸ்தான் நாடுகளுக்கிடையே சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்துவதற்காக, பாகிஸ்தான் அரசின் உயர்மட்டக் குழுவொன்று இலங்கை வரவுள்ளது.

இவர்கள் வர்த்தக, விமானசேவை தொடர்பான பேச்சுவார்த்தையினை மேற்கொள்வதுடன், ஆடைத் தொழில் தொடர்பாகவும், பேச்சுவார்த்தை நடத்தவுள்ளனர். பாகிஸ்தானில் உள்ள ஆடைத்தொழிற்சாலை உரிமையாளர்கள் இலங்கையில் முதலீடு செய்வது சம்மந்தமாகவும், இந்தக் குழுவினர் ஆராயவிருக்கின்றனர்.

இது சம்மந்தமான பேச்சுவார்த்தை ஒன்றில் வர்த்தக அமைச்சர் ரவி கருணாநாயக்காவும், பாகிஸ்தான் வர்த்தக அமைச்சரும், ஏற்கனவே சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

இதேவேளை, இலங்கைக்கும் - பாகிஸ்தானுக்கும் இடையே வர்த்தக ஒப்பந்தம் விரைவில் கைச்சாத்தாகும் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதற்கான அமைச்சர் மட்டத்திலான பேச்சுவார்த்தை மெக்ஸிகோ, கென்கூன் நகரில் இடம்பெறவுள்ளதாகத் அறியப்படுகிறது.

# அம்பாந்தோட்டையில் துப்பாக்கிச் சூடு!

## மூவர் பலியாகினர்

(கொழும்பு)

தென்பகுதியில் நேற்று அதிகாலை இடம்பெற்ற இரண்டு துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில், மூவர் கொல்லப்பட்டனர்.

அம்பாந்தோட்டையில் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் இருவரும், கட்டுப்பெத்தையில் இடம்பெற்ற சம்பவத்தில் ஒருவரும் கொல்லப்பட்டனர்.

தனிப்பட்ட குரோத அடிப்படையிலேயே இந்தச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. தென்னிலங்கையில் நாள்தோறும் சுமார் நான்கு கொலைச் சம்பவங்கள் இடம்பெறுவதாக, பொலிஸ் தலைமையக புள்ளிவிபரம் தெரிவிக்கிறது. இதில் படையிலிருந்து விலகியவர்களே பெருமளவில் ஈடுபட்டுவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (01)

# காத்தான்குடியில் மீன்பிடிப்படகை மோதி மூழ்கடித்த கப்பல்!

காத்தான்குடி பாலமுனைக் கடலில் - மீன்பிடித்துக்கொண்டிருந்த படகொன்றின்மீது, இனந்தெரியாத கப்பல் ஒன்று மோதிவிட்டுச் சென்றுள்ளது.

இதனால், இரு பிள்ளைகளின் தந்தையான ஒருவர் கொல்லப்பட்டதுடன், 15 லட்சம் ரூபா பெறுமதியான படகும் தேசமடைந்துள்ளது. படகில் பயணம் செய்த மேலும் இரு மீனவர்கள் நடுக்கடலில் பலமணிநேரம் தத்தளித்த பின்னர் வேறு படகின் உதவியுடன் காப்பாற்றப்பட்டனர்.

பாலமுனையைச் சேர்ந்த இப்ராஹிம் ஹூஸைன் என்பவரே கொல்லப்பட்டவராவார். வெள்ளி இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது, கல்முனைப் பகுதியில் இருந்து திருமலை நோக்கிச் சென்ற கப்பல் எமது படகில் மோதியது. படகினுள் உறங்கிக் கொண்டிருந்த இப்ராஹிம் ஹூஸைன் கடலில் தூக்கி வீசப்பட்டார். நாங்கள் இருவரும் உடைந்த படகுகளின் துணையின் உதவியோடு, நீந்திச் சென்று வேறு ஒரு படகின் உதவியைப் பெற்றோம் என்று, உயிர் தப்பிய மீனவர்கள் தெரிவித்தனர்.

# கடற்படைக்கு 30 மி.மீ.பீரங்கிகள் கொள்வனவு செய்ய நடவடிக்கை

(கொழும்பு)

கடற்படையின் அதிவேக தாக்குதல் படகுகளுக்கு தேவையான, 30 மி.மீ ரக பீரங்கிகளையும், உபகரணங்களையும் இஸ்ரேலிடமிருந்து கொள்வனவு செய்வதற்கு பாதுகாப்பு அமைச்சு, நடவடிக்கை எடுத்துவருகிறது

இஸ்ரேலிடமிருந்து இந்த ஆயுதங்களை கொள்வனவு செய்வதற்கு அமெரிக்க ஆயுத விற்பனை நிறுவனமும், முன்னாள் கடற்படைத் தளபதியும் பலத்த எதிர்ப்புத் தெரிவித்தனர்.

தற்போது விடுதலைப் புலிகளால் 30 மி.மீ பிரங்கிகள் பாவிக்கப்படுவதாகவும் ஆனால், ஆயுதப்படையினரிடம் 23 மி.மீ பீரங்கிகள் மாத்திரமே பாவனையில் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதன் காரணமாக 23 மி.மீ பீரங்கிகளுக்கு பதிலாக 30 மி.மீ பீரங்கிகளையும், ஆயுதங்களையும் இஸ்ரேலிடமிருந்து பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக, பாதுகாப்பு அமைச்சின் வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது.

கடற்படைக்கு 30 மி.மீ பீரங்கிகளை கொள்வனவு செய்வது தொடர்பாக, அரசாங்கம் மூன்றுபேர் கொண்ட குழுவை நியமித்துள்ளது.

# பாதிரியார் கொலை சந்தேகநபருக்கு பிணை வழங்க நீதிமன்றம் மறுப்பு!

(கொழும்பு)

நீர்கொழும்பு பாதிரியார் அபா கொஸ்தாவின் கொலைச் சந்தேகநபரான, கோடீஸ்வர வர்த்தகருக்கு எந்தவொரு நீதிமன்றத்திலும் பிணை வழங்கக்கூடாது என, நீர்கொழும்பு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் இடம்பெற்ற இந்தக கொலையின் சந்தேகநபர், வெளிநாடொன்றில் தஞ்சமடைந்து மீண்டும் நாடுதிரும்பியதையடுத்து கைதுசெய்யப்பட்டார்.

சந்தேகநபருடைய கடவுச்சீட்டை நீதிமன்றத்திடம் கையளிக்குமாறு உத்தரவிடப்பட்டபோதும், அவர் இதுவரை அதனை ஒப்படைக்கவில்லை.

இதையடுத்தே நீர்கொழும்பு நீதிமன்றம் - அவருக்கு எந்தவொரு நீதிமன்றமும் பிணைவழங்கக்கூடாது என்ற உத்தரவை பிறப்பித்துள்ளது. (01)

# ரயில்வே ஊழியர் வேலைநிறுத்தம்; பதினேழு கோடி ரூபா நஷ்டம்

(கொழும்பு)

ரயில்வே திணைக்கள வேலை நிறுத்தத்தால், ரயில்வே திணைக்களத்துக்கு இதுவரை 17 கோடி ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதென்று, ரயில்வே அதிகாரசபையின் தலைவர் பி.எச்.மனதுங்க தெரிவித்தார்.

வேலை நிறுத்தத்தின்போது, 22 ரயில் எஞ்சின்களும் சேதமாக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். ஊழியர்களுடன் தான் எந்த நேரத்திலும், பேச்சுவார்த்தைக்கு தயாராக உள்ளதாகவும், மக்களுக்கு பாதிப்பு ஏற்படாதவாறு ரயில் சேவைகள் நடத்துவதற்கு, ஊழியர்களை வேலைக்கு திரும்புமாறும், அவர் கேட்டு கொண்டுள்ளார்.

# சிறுவர்களுக்கான நலவாழ்வுத் திட்டங்கள் முறையாக அமுல்படுத்தப்படுகின்றனவா?

கடந்த ஒரு வருடத்திற்கு முன்பு சில சிறுவர் பராமரிப்பு நிலையங்களுக்கு சென் றேன். அங்கு நான் கண்ட சில சம்பவங்கள் எனது மனதில் நெருடலை ஏற்படுத்திக் கொண்டே இருக்கின்றன, அவற்றை தீர்ப் பதற்கு என்னுடைய அனுபவத்தில் சில தீர்வு களை முன்வைக்கின்றேன். சரியான தீர்வு காணவேண்டும் என்பதற்காக, உங்களுக்கும் அவற்றைத் தெரியப்படுத்துகின்றேன்.

போரால் நாம் அடைந்தது எத்தனையோ, அவற்றில் வறுமையான குடும்பங்களும், ஆதர வற்ற சமுதாயமும்தான், இன்னும் எம்மண் ணில் பல இன்னல்களை அனுபவித்துக் கொண்டிருக்கின்றன. இவைதவிர பணம் இருக் கின்ற மக்கள் அளவிற்கு மிஞ்சிய பணத்தை என்ன செய்வது என்று தெரியாது அப் பணம் ஏதோ எல்லாம் செய்து கொண்டிருக்கின்றது.

இதில் முதலாவது வகையினருக்குப் பல தொண்டு நிறுவனங்கள் உதவிசெய்து கொண்டிருக்கின்றன. தொண்டு நிறுவனங் களில் சாதாரணமாகக் காணப்படும் ஊழல் தவிர்க்கமுடியாது. கேள்வி கேட்க ஆளில் லாமல், ஒதுக்கப்பட்ட மொத்தப்பணத்தில் ஒரு தொகையாவது மக்களைப் போய்ச் சேரு கின்றதா என்று கேட்டால், அங்கும் கேள்விக் குறியே மிஞ்சுகிறது.

தொண்டு நிறுவனங்களால் செலவு செய் யப்படும் பணம் - முறையாகச் செலவு செய் யப்பட்டால், அடையும் நன்மை அபரிமிதமா கவே இருக்கும் என்பது என்னுடைய கருத்து. அநேகமான திட்டங்கள் வெளிநாட்டை சேர்ந்த திட்டம் தீட்டும் வல்லுநர்களால் திட்டமிடப்ப டுகின்றது. அதன் நோக்கங்கள் சிறந்தவை யாக இருந்தாலும், அத்திட்டங்களை நடை முறைப்படுத்தும் நம்மவர்கள் - தமது மேலதி காரிகளுக்காக அத்திட்டங்களைச் செய்வத னால், எந்த சரியான திட்டமாக இருந்தாலும், அந்தத் திட்டங்கள் அதன் குறிக்கோளை அடையத் தவறிவிடுகின்றன.

அநேகமான திட்டங்கள் - திட்டவரைபு, திட்டசெலவு அறிக்கை, திட்ட பின் அறிக்கை என எல்லாமே சரியாக மேலதிகாரிகளுக்கு அளிக்கப்படுகின்றன. ஆனால், அத்திட்டங்க ளால் எத்தனை பேர் பயன் அடைந்தார்கள் என்று பார்த்தால், ஒரு சில பேர்களாகத்தான் இருக்கும்.

அடுத்தது ஆதரவற்றவர்களுடையது, பல சிறுவர் பராமரிப்பு நிறுவனங்கள் உள்ளன என்பதை யாவரும் அறிந்திருப்பீர்கள். நல்ல நோக்கம். பல ஆதரவற்ற எத்தனையோ பேர் பலன் அடைகிறார்கள். உணவு, உடை, உறையுள், கல்வி, சுகாதாரம் என எல்லா அடிப்படைத் தேவைகளும் நிறைவேற்றப்படு கின்றன. இதில் ஒவ்வொரு நிலையத்திற்கும், மற்றைய நிலையத்திற்கும் நிறையவே வேறுபாடுகள் இருக்கின்றன. இதற்குப் பல காரணங்கள், முக்கிய காரணம் - அதன் நிர் வாகமே என்பது என்னுடைய கருத்து. எப் போதுமே ஒரு இனமோ அல்லது வியாபா ரமோ சிறப்பாக அமைவதற்கு, அதன் கொள் கைளும், தலைமையும் காரணம். இதனை யாரும் மறுக்கமுடியாது, இதற்கு வரலாறு நல்ல உதாரணம்.

பசித்தவனுக்கு மீனைக் கொடுப்பதிலும் பார்க்க, அவனுக்கு மீன்பிடிக்கக் கற்றுக் கொடுப்பது சிறந்தது. இது மாவோ சேதுங்கின் வாதம். இதுவே என்னுடைய வாதமும்கூட. இப்போது இயங்கிக்கொண்டிருக்கும் சிறுவர் பராமரிப்பு நிலையங்களில் எத்தனை இக் கொள்கையைப் பின்பற்றுகின்றன என்பது கேள்விக்குறியே. இந்தச் சிறுவர்கள் இவ்வா றான ஒரு பராமரிப்பு நிலையத்திற்குத் தற்சம யம் செல்லாதிருந்தால், ஒரு பகுதியினர் சாப்பாட்டிற்கு வழியில்லாமல், செத்து மடிந் திருப்பார்கள். ஆனால், இன்னுமொரு பகுதியினர்- சமூகத்திலிருந்து, சமூகத்தைப் படித்திருப்பார்கள், தான் எவ்வாறு வாழ வேண்டும் என்று தன் அனுபவத்தால் கற்றிருப் பார்கள், சிலவேளை, அதில் ஒருவர் விஞ்ஞா னியாகவோ அல்லது பெரிய வியாபாரியா கவோ வந்திருக்கலாம். இதற்கும் வரலாறே சாட்சி. வறுமை ஒருவனைச் சரியாக வழி நடத்தும், அதற்காக எல்லோரும் வறியவர்க ளாக இருக்கவேண்டும் என்று சொல்ல வில்லை. மாறாக, சிறுவர் பராமரிப்பு நிலையங் களை நிர்வகிப்பவர்கள், அவர்களைச் சரியான பாதையில் வழிநடத்தவேண்டும். அவ்வாறு செய்யத்தவறும் சந்தர்ப்பத்தில் ஈழத்திலுள்ள அனைத்து ஆதரவற்ற குழந்தைகளும், தொடர்ந் தும் ஆதரவற்றவர்களாகவே இருப்பார்கள்.

இந்து மாமன்றத்தால் நிர்வகிக்கப்படும் இரத்மலாணையில் இயங்கும் ஆண்கள் விடுதி-

அங்கு ஏறத்தாழ பாலர் வகுப்பில் இருந்து, உயர்தரம்வரை 100 மாணவர்கள் இருக்கின் றார்கள். நாட்டின் பல பகுதிகளில் இருந்தும், பல சமூகப் பின்னணிகளிலிருந்தும் மாணவர் கள், தாய் - தந்தை இருவரையும் இழந்தவர் கள், தாய் அல்லது தந்தையை இழந்தவர்கள் அல்லது குடும்பத்தில் பொருளாதாரக் கஷ்டம் உள்ளவர் என்று எல்லோரும் இருக்கிறார்கள்.

இவர்கள் இரத்மலானை இந்துக்கல்லூரி லேயே தமது கல்வியைக் கற்கிறார்கள், இவர்களை பராமரிக்க இருவர், இவர்களுக்கு உணவு சமைக்க ஒரு குடும்பம், இவர்களை நிர்வகிப்பவர்கள் வாரத்தில் இரண்டு தடவை யாவது வந்து பார்ப்பார்கள். இதுதான் இவர்க ளுடைய பின்னணி.

இவர்களை நான் சந்தித்து உரையாடும் சந்தர்ப்பம் கிடைத்தது. அப்போது அவர்கள் என்னிடம் சொல்லிய சில அவர்களுடைய யதார்த்தமான ஏக்கங்கள்-

எங்களுக்கு அம்மா, அப்பா இருந்தால், எங்களை இப்படி ஏசுவார்களா?

எங்களுக்கு வசதியான சொந்தக்காரர்கள் இருந்தால், நாங்களும் வெளிநாட்டுக்குப் போயாவது கொஞ்சம் காசு உழைச்சு, வசதி யாக இருந்திருப்போம்!

எப்படியாவது படிச்சு, வீட்டைப் பார்க்க வேணும்.

சாப்பாட்டுக்கடையில் வேலை எடுத்து தந் தார்கள். அங்கு விடிய 6 மணியிலிருந்து இரவு 10 மணிவரை வேலை. பிறகு வந்து படிக்க ஏலாது.

இங்குள்ள மாணவர்கள் உயர்தரம் எடுக் கும் வரைக்கும் தங்கியிருந்து படிக்கலாம். பின்பு அவர்கள் அங்கிருந்து வெளியேற வேண்டும் (சிலரை மட்டும் தங்க அனுமதித்து இருக்கிறார்கள்). அவர்கள் உயர்தரம் எதிர் பார்த்த சித்தி எய்துவது குறைவு. பாடத்தில் அவர்கள் கவனம் செலுத்திப் படிப்பது குறைவு. சில வசதிக் குறைவுகள். இவ்வாறு பல கார ணங்கள் அவர்கள் கூறினாலும், இவர்கள் எதிர் காலம் பற்றி ஏக்கத்துடனேயே இருக்கிறார்கள்.

இவர்களைப்போலவே மற்றைய சிறுவர் காப்பகங்களில் இருக்கும் சிறுவர் சிறுமியர் களின் எதிர்காலம் என்பதும் இவற்றைத் தாண்டி, இவ்வாறான காப்பகங்களின் மூலம் தமது சொந்தத் தேவைகளைப் பூர்த்தி செய்பவர்கள், இந்தச் சிறுவர்களைப் பாலியல் துஷ்பிரயோகங்களுக்கு உட்படுத்துவோர் என எல்லா வகையினரும் உள்ளனர்.

மூன்றாவது வகையினர்- வெளிநாடுகளில் இருந்து உழைப்பவர்கள். தன்னைப்போல தன்னுடைய சகோதரமோ, சகோதரியோ கஷ் டப்படக்கூடாது என்ற நோக்கில் யாழ்ப்பா ணத்திற்குத் தாராளமாகவே பணம் அனுப்புகி றார்கள். இது பிழை அல்ல, ஆனால் அவர்கள் இந்தப் பணத்தைக்கொண்டு என்ன செய்கி றார்கள் என்று ஒரு நாளாவது யோசித்துப் பார்த்திருப்பார்களா? அப்படி யோசித்து, விடை கிடைக்காவிட்டால், நான் சொல்வதில் சில உங்களுக்கு விடையாகும்.

யாழ்ப்பாணத்தில் எத்தனையோ கோயில்கள் இருக்கின்றன. இவற்றில் சில போரினால் பாதிப்படைந்துள்ளன. அவை அனைத்தும் புதுப்பித்து கட்டப்படுகின்றன. அதே ஊரில் பல பாடசாலைகளும் பாதிப்புற்றன. ஆனால், அவை வெளிநாட்டு நிதி நிறுவனங்களின் உதவிக்காகக் காத்துக்கிடக்கின்றன, பாதிப்புறாத கோயில்களும், இடித்து இராஜ கோபுரங்களுடன் கட்டப்படுகின்றன. ஆனால், கடந்த சில வருடங்களாக வடக்கு - கிழக்குப் பாடசாலைகளின் கல்வித்தரம் குறைந்து வரு கின்றது. இதனை எல்லாப் பத்திரிகைகளும், பரீட்சைப்பெறுபேறுகளும் சொல்கின்றன.

வேலைக்குப் போகின்றவர் - சரியான போக்குவரத்து இல்லாத காரணங்களுக்காக, மோட்டார் சைக்கிள் வாங்குகின்றார். அதே வேளை பக்கத்து வீட்டுக்காரர் மோட்டார் சைக்கிள் வாங்கிவிட்டார் என்ற காரணத் திற்காக, வேலைக்கு எதுவும் போகாதவரும் மோட்டார் சைக்கிள் வாங்குகின்றார். மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்வது நல்லது, பாராட்ட வேண்டியது. ஆனால், உயரவேண்டிய கல் வித்தரம் கேள்விக்குறியாக உள்ளது.

போராட்டம் - அநேகமான மக்களை நாட்டை விட்டு, கலாசாரத்தை விட்டு, அவர்களுடைய வாழ்க்கை முறையிலிருந்து, அவர்களின் சிந்தனையிலிருந்து இடம்பெயர்த்து விட்டது. போராட்டம் ஏன் நடத்தப்படுகின்றது? ஏன் எத்தனையோ இளம் உயிர்களைப் பலி கொடுத்தோம்? இந்த மாற்றங்களை எல்லாம் பார்த்து சந்தோசமடையவா? இது எல்லாம் என்னுடைய கேள்வி அல்ல, 20 வருடமாகப் போராட்டத்தில் எத்தனையோ கஷ்டங்களைச் சந்தித்த புலி வீரன் ஒருவருடைய ஏக்கம்.

ஏன் அவர் மட்டும்தான் எங்கள் தேசத் தைப்பற்றியும், மக்களைப்பற்றியும் கவலைப் பட வேண்டுமா? நாங்கள் என்ன செய்யப் போகின்றோம்?

எமது மக்களின் கல்வித்தரத்தை உலக தரத்திற்கு உயர்த்தவேண்டும். எமது சிறுவர்கள் நேரிடையாக எதிர்கொள்ள, அவர் களைத் தயார்ப்படுத்தவேண்டும்.

உலகமயமாக்கலில் எமது இனமும், மக்களும் தொலைந்துபோகாது பாதுகாக்க வேண்டும்.

பிரச்சினையைச் சொன்னேன், தீர்வைச் சொன்னேன், எவ்வாறு செய்யப்போகின்றோம்?

எல்லாக் கிராமங்கள், நகரங்களிலுள்ள சிறுவர் பாடசாலைகள் - சர்வதேசதரத்தில் கற்பிக்கப்படுவதை உறுதிப்படுத்தவேண்டும்.

சிறுவர் பாடசாலைகள், உதாரணமாக- இணுவிலில் ஆறு சிறுவர் பாடசாலைகள் இருக்கின்றன. இதில் கிட்டத்தட்ட 300 சிறுவர்,




சிறுமியர் கல்வி கற்கின்றனர், இவர்களுக்கு, ஒரு நிலையத்திற்கு இருவர் என்ற அடிப் படையில், 12 ஆசிரியர்கள் கற்பித்தலில் ஈடுப டுகின்றனர். இவர்களின் சம்பளம் 1200 ரூபா விற்கும் 650 ரூபாவிற்கும் இடையில்தான் இந்தச் சம்பளம். சாதாரண எந்தச்செலவிற்கும் போதாது என்பது ரூபாவின் பெறுமதி அறிந்த அனைவருக்கும் தெரியும். அதுமட்டுமல்ல, அவர்கள் அனைவரும் ஆகக்கூடியது உயர் தரம் மட்டுமே படித்தவர்கள். இவர்களுக்கான சில பயிற்சிகளைச் சில தொண்டு நிறுவனங் கள் மேற்கொண்டாலும், கொழும்பிலுள்ள ஆசிரியர்களுடன் ஒப்பிடும்போது, அவை போதாது என்பது என்னுடைய கருத்து. இணு வில் - போரால் அதிகம் பாதிக்கப்படாத ஒரு இடம். அங்கே இந்த நிலைமை என்றால், போரால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கின் மற்றைய பகுதிகள் பற்றி நான் சொல்லவேண் டியது இல்லை. இதனை வாசிக்கும் ஒவ்வொ ருவரும் உங்கள் பகுதியைப்பற்றிச் சிந்தித்துப்

ஒரு

பாருங்கள்.

இவற்றையெல்லாம் அரசாங்கம் கவனிக் கட்டும் என்றிருந்தால், இப்போதுள்ள சிறுவர் கள் - பெற்றோர் ஆகிவிடுவார்கள். உடனடித் தீர்வு - சிறுவர் பாடசாலை ஆசிரியர்களுக்காக ஒரு பாடசாலை அமைக்கப்படவேண்டும், அவா களுக்கான பாடத்திட்டங்கள் - வெளிநாடு களிலுள்ளது போன்று வடிவமைக்கப்பட வேண்டும், அவற்றை அமுல்படுத்தவேண்டும், தொடர்ந்து கண்காணிக்கவேண்டும், பிழைகள் திருத்தப்பட்டு, மேலும்மேலும் இத்துறை வளர்க்கப்படவேண்டும்.

இதை இப்போது செய்யவேண்டும். இப் போது வெளிநாட்டு நிதி நிறுவனங்களால் மட்டும் கவனிக்கப்படும் எமது சிறுவர்களின் நலன், சரியானமுறையில் எம்மவர்களால் கவனிக்கப்படவேண்டும்.

அண்மையில் கற்றல், கற்பித்தலில் கணினி என்ற தலையங்கத்தில், வடக்கில் பல பாகங்களிலும், கிழக்கில் திருகோண மலையிலும் - மாணவர்கள், ஆசிரியர்கள், கல்விசார் உத்தியோகத்தர்கள் என எல்லோ ருக்குமான விழிப்புணர்வு கருத்தரங்கு நடாத்தி யிருந்தோம் ( சிவகுருநாதபிள்ளை, லண்டன் கோல்ட்சிமித் பல்கலைக்கழகம், **TITA** நிறு வனத்தில் இருந்து ரவிசங்கர் மற்றும் நான்).

இந்த கருத்தரங்கு முடிவில் நான் பெற்ற அனுபவம் -

இரண்டு வருடங்களுக்கு முன்பு சில பாட சாலைகளில் கருத்தரங்கு வைத்திருந்தோம். அப்போது அவர்கள் கூறியது - எங்களிடம் கணினி இல்லை. நாங்கள் என்ன செய்வது. அதே பாடசாலையில் இந்தமுறை சென்றிருந் தோம், இம்முறை அவர்கள் சொன்னது எங் களுக்கு நேரமில்லை, முடிந்தால் சம்பளத் துடன்கூடிய மூன்று மாத விடுப்பு தந்தால், நாங்கள் கணினிப்பயிற்சி பெற்று, மாணவர் களுக்குக் கற்பிப்போம் (அவர்களின் பாடசா லையில் இப்போது 40 கணனிகள் இருக் கின்றன).

ஆசிரியத்தொழில் என்பது, மிகவும் இலகு வான தொழிலாக அநேகமானவர்கள் கருது கின்றார்கள். காலை 8.00 மணிக்குத் தொடங்கி, 2.30 இற்கு முடிந்துவிடும். வருடத்தில் மூன்று மாதங்கள் விடுமுறை எனப் பலவசதிகள், செல்வாக்கைப் பயன்படுத்தி, நகரப்பாடசா லைகளுக்கு இடமாற்றம், அதேபாடசாலையில் பிள்ளைகளுக்கும் ஒரு இடம், பின் தங்கிய பாடசாலையில் புதிதாக நியமிக்கப்பட்டவர்க ளும், தொண்டர் ஆசிரியர்களும் பணியாற்று கின்றனர். ஆனால், மாணவர்களின் கல்வித்தர வீழ்ச்சிகளுக்கு ஆசிரியர்கள்மேல் மட்டும் பிழை சொல்லமுடியாது, ஆனாலும், ஆசிரியர் களும் ஒருகாரணம்.

இதேபோல்தான், எல்லோரும் ஒரு கார ணம் சொல்கிறவர்களாக இருக்கிறார்கள், இப்படித்தான் தொடர்ந்தும் சொல்வார்கள். மாணவர்கள் விழிப்படையவேண்டும், மாணவர் களின் சுயகற்றலை ஊக்குவிக்கவேண்டும்.

அரசாங்கம் புதிதாக ஆசிரியர்களை நிய மிப்பது இல்லை. ஒரு பாடசாலைக்கு 22 ஆசிரியர்கள் தேவையெனில், அங்கு 17 ஆசிரியர்களே பணிபுரிகின்றனர். அவர்களிலும் 7 பேர் தொண்டர் ஆசிரியர்கள். கிழக்கில் 125 மாணவர்களுக்கு அதிபர் மட்டுமே எல்லாம். இது தான் வடக்கு - கிழக்குப் பாடசாலைகளின மறுபக்கம்.

இன்னும் பழைய முறைப்படியான கற்பித் தல் முறையே பின்பற்றப்படுகின்றது. எமக்குத் தற்போதுள்ள கல்விமுறையைத் தந்த இங்கி லாந்தில், வருடா வருடம் கற்றல், கற்பித் தலில் மாற்றம் செய்துகொண்டே வருகிறார் கள், ஆனால், நாம் இவற்றைப்பற்றி எல்லாம் கவலை இல்லாமல் இருக்கின்றோம்.

தற்போதுள்ள மாணவர்களின் கல்வித் தரத்தை உயர்த்த - வெளிநாடுகளில் பின்பற் றப்படும் கணனி வழி கற்றலை அறிமுகம் செய்து, மாணவர் மத்தியில் கற்றலுக்கான ஆர்வத்தைக்கூட்டி, கல்வித்தரத்தை உயர்த்த வேண்டும். இது பற்றிய விழிப்புணர்வு மாண வர், ஆசிரியர் மத்தியில் ஏற்படுத்தப்பட வேண் டும்.

கற்றலுக்கான **Multimedia CD, Video, Audio** உருவாக்கப்படவேண்டும். இது தற்போதுள்ள ஆசிரியர் பிரச்சினை, வளப் பற்றாக்குறை, மாணவர்களின் கற்றல் மீதான ஆர்வமின்மை போன்ற எல்லாப்பிரச்சினைக ளுக்கும் தீர்வாக மாறலாம்.

எல்லா ஊர்களிலும் குறைந்தது ஒரு தொழிற்பயிற்சி நிலையம் அமைக்கப்பட வேண்டும். இந்த நிலையங்கள் பாடசாலையை விட்டு நீங்கும் மாணவர்களுக்கு, எதிர்காலத்தை எதிர்கொள்ளக்கூடிய வகையில், தொழில் பயிற்சி வழங்கவேண்டும். அதனால், அவர்கள் வருமானம் பெறுவதையும் உறுதிப் படுத்த வேண்டும்.

வெளிநாடுகளில் வாழும் எமது சந்ததி யினர் - தமிழையும், தாய் நாட்டையும், எமது பாரம்பரியங்களையும் தொடர்ந்து பேணி வளர்க்கத் தேவையான நடவடிக்கைகள் குறித்து, ஒவ்வொருவரும் தமது கடமையை உணர்ந்து செயற்படவேண்டும். ★

# செச்சினியாவில் நடந்த தேர்தலில் அகமட் கடிரோவ் பெருவெற்றி!



கடந்த ஞாயிற்றுக்கிழமை ரஷ்யாவின் குடியரசான செச்சினியாவில் நடைபெற்ற தேர்தலில், மொஸ்கோ சார்பான வேட்பாளர் அகமட் கடிரோவ் அதிபெரும்பான்மையுடன் வெற்றியீட்டியதாக, ரஷ்ய அதிகாரிகள் தெரிவித்தனர். கடிரோவ் பிராந்திய நிர்வாக அதிகாரியாகக் கடமையாற்றி வருகிறார்.

செச்சினியாவில் தொடரும் வன்முறையை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு, இந்த வெற்றி உதவும் என, ரஷ்யா தெரிவித்துள்ளபோதும், மனிதநேய அமைப்புகள் இந்தக் கருத்திற்கு மறுப்புத் தெரிவித்தன.

தேர்ந்தெடுக்கப்பட்ட கடிரோவ் - செச்சினியாவில் போராளிக் குழுவொன்றின் தலைவராக முன்னர் செயற்பட்டவராவார். 1999 ஆம் ஆண்டு செச்சினியா மீதான ரஷ்யாவின் ஆக்கிரமிப்பின் பின்னர் - ரஷ்ய அரசுடன் இணைந்து செயற்படத் தொடங்கினார் எனவும் தெரிவிக்கப்பட்டது. இந்தத் தேர்தலை தீவிரவாத குழுக்கள் புறக்கணித்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.



இஸ்ரேல் வீரர்களுக்கும் பலஸ்தீனியர்களுக்கும் இடையே நடைபெற்ற மோதலின்போது - இஸ்ரேல் வீரர் ஒருவர் பலஸ்தீனியர்களை நோக்கிக் குறிவைக்கிறார்.

## ஆர்மிரேஜ் - முஷாரப் சந்திப்பதற்கு ஏற்பாடு



அமெரிக்க இராஜாங்க உதவி காரியதரிசி ரிச்சாட் ஆர்மிரேஜ் பாகிஸ்தான் ஜனாதிபதி பர்வேஷ் முஷாரப்பை இஸ்லாமாபாத்தில் சந்திப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் - அண்மையில் அல் - கொய்டா அமைப்பிற்கு எதிராக நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பாக கலந்தாலோசிக்கத் திட்டமிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈராக்கில் பணிபுரிவதற்கான சர்வதேச சமாதானப் படையில் பாகிஸ்தானையும் இணைத்துக்கொள்வதற்கான சாத்தியங்கள், இந்தியாவுடனான பாகிஸ்தானின் உறவுகள் தொடர்பாக கலந்துரையாடவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆப்கானிஸ்தான் அதிகாரிகளுடனான உரையாடலில், இரு நாட்டு எல்லைகளிலேயே தீவிரவாதிகளின் இருப்பிடங்களைக் கண்டுபிடிப்பதில் பாகிஸ்தான் எடுத்துக்கொண்ட முயற்சியை அமெரிக்க உதவி இராஜாங்க காரியதரிசி ஆர்மிரேஜ் பாராட்டினார்.

இதனிடையே பாகிஸ்தான் அண்மையில் சிறைப்படுத்திய 18 அல் - கொய்டா தீவிரவாதிகளை விசாரணை செய்துவருவது குறிப்பிடத்தக்கதாகும்.

## உலக நோக்கு

# சிரியா மீதான இஸ்ரேலின் தாக்குதல்; ஐ.நா.பாதுகாப்புச் சபை கண்டிப்பு!




கடந்த ஞாயிற்றுக்கிழமை ஐக்கியநாடுகளின் பாதுகாப்பு சபைக் கூட்டத்தில் சிரியா மீதான இஸ்ரேலின் தாக்குதலை பாதுகாப்பு சபை அங்கத்தவர்கள் கண்டித்துள்ளனர்.


இதேவேளை, சனிக்கிழமை இஸ்ரேலின் கைபர் நகரில் இடம்பெற்ற பலஸ்தீனத் தீவிரவாதிகளின் தற்கொலைத் தாக்குதலையும் கண்டித்தனர். அத்துடன் - இஸ்ரேல் மீது பிரேரணை ஒன்றை மத்திய கிழக்கு நாடுகள் கொண்டுவர முயற்சி செய்தபோது சபை பிற்போடப்பட்டது.

மத்திய கிழக்கு நாடுகளால் இஸ்ரேல் தொடர்பாகக் கொண்டுவரப்படும் பிரேரணைகளை அமெரிக்கா தனது வீட்டோ அதிகாரத்தைப் பிரயோகித்து தடைசெய்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இஸ்ரேல் கோலான் குன்று பகுதியை தம்முடன் இணைத்துக் கொண்டதில் இருந்து சிரியாவும், இஸ்ரேலும் நீண்டகாலமாக இரு நாடுகளுக்கும் இடையில் முறுகல் நிலை இருந்துவருகிறது.

இதேவேளை, ஐக்கியநாடுகள் சபைக் கூட்டத்தில் அமெரிக்கத் தூதுவர் யொன் நிகிரோபொன்ரி சிரியா தனது எல்லையில் அமைத்துள்ள பயங்கரவாத அமைப்பைக் கலைத்துவிட வேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளார்.

## மருத்துவத்திற்கான நோபல் பரிசு இருவருக்கு வழங்க முடிவு



பிரித்தானியாவில் நோற்றிங்கம் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக கடமையாற்றும் பீற்றர் மானஸ்பெட் மருத்துவத்திற்கான நோபல் பரிசை, அமெரிக்கப் பேராசிரியர் போல் லேரெபேர் உடன் இணைந்து பெற்றுக்கொள்ளவுள்ளார்.

மனித உடலின் உள் உறுப்புகளை ஆரம்ப நாட்களில் எக்ஸ் கதிரின் மூலம் படம்பிடித்துக் கொள்ள முடிந்தது. இவை உடல் உறுப்புக்களுக்கு ஆபத்து விளைவிக்கக்கூடிய கதிர் எனவும் கருதப்பட்டது. ஆனால், பேராசிரியர் பீற்றரின் காந்த அலைகளின் எதிரொலி மூலம் படம் பிடிக்கும் முறை பலராலும் வரவேற்கப்பட்டிருந்தது. இவரின் கண்டுபிடிப்பின் மூலம் உள் உறுப்பொன்றின் முப்பரிமாண அமைப்பை படம் பிடித்துக்கொள்ள முடிந்தது.

பிரித்தானியா கடந்த மூன்று ஆண்டுகளாக தொடர்ந்து மருத்துவத்தில் நோபல் பரிசை வென்றுவருவது குறிப்பிடத்தக்கது.

## தலிபான் அரசாங்கத்தின் வீழ்ச்சிக்கு பின்னர் ஆப்கான் பெண்கள் வாழ்வில் முன்னேற்றம்!

### சர்வதேச மன்னிப்புச்சபை கூறுகிறது

தலிபான் ஆட்சி அகற்றப்பட்டபின் - ஆப்கான் பெண்களின் வாழ்வில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதாக, மனித உரிமை அமைப்பான சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது.

மதவாத அமைப்பான தலிபானின் வீழ்ச்சிக்குப் பின்னர், பல ஆயிரத்திற்கும் அதிகமான சிறுமிகள் பாடசாலைகளுக்கு சமுகமளிக்கக் கூடியதாகவும் பெண்கள் தொழில் முயற்சிகளில் ஈடுபடக் கூடியதாக உள்ளதாகவும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

இருந்தும் பெண்களுக்கு முழுமையான பாதுகாப்பு இப்பொழுதும் கிடைக்கவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. பாலியல் வல்லுறவுகளும், சிறுவர் திருமணங்களும் தொடர்வதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தலிபான்களுக்கு எதிரான போரில், ஆப்கானிஸ்தானிய பெண்களுக்கு விடுதலை கிடைத்துவிடும் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், பெண்கள் தொடர்ந்தும் அழுத்தங்களுக்குட்பட்டு வாழ்வதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் ஆப்கானிஸ்தானின் அரசியல் அமைப்பில் பெண்களுக்கு கூடுதலான உரிமைகள் வழங்கப்படக்கூடியதான மாற்றங்கள் செய்யப்பட்ட பின்னர், சர்வதேச மன்னிப்புச் சபை மேற்கண்ட கருத்துக்களைத் தெரிவித்துள்ளது.

தலைநகர் காபூலுக்கு வெளியே ஜனாதிபதி ஹமிட் ஹர்சாய் சட்டங்களைச் செயற்படுத்த முடியாத நிலையில் உள்ளாரெனவும் தெரிவிக்கப்பட்டது.



மட்டக்களப்பு வவுணதீவில் நேற்று இடம்பெற்ற சந்திப்பில் கலந்துகொண்ட இராணுவ அதிகாரிகளையும், விடுதலைப் புலிகளையும் படங்களில் காணலாம்.

## ஊர்சுற்றி எழுதுவது

தேசவிசுவாசிகளைத் திரட்டி சிறிலங்காப் படைகளைப் பலப்படுத்தி, 'பயங்கரவாத' விடுதலைப் புலிகளை அழித்தொழிப்பதற்கு காலத்துக்காலம் பிரசாரம் செய்யப்பட்டது.

தேசப்பற்றுடன் சிங்கள இளைஞர்கள் படைகளில் சேருவதற்காக வரிசையில் முண்டியடித்துக் கொண்டு நின்ற புகைப்படங்கள் சிங்கள ஆங்கிலப் பத்திரிகைகளில் வெளிவந்தன.

முன்னாள் பிரதமர் இரத்தினசிறி விக்கிரமநாயக்கா படைகளுக்கு இளைஞர்களைத் தேச விசுவாசத்துடன் திரட்டுவதற்காக, கதிர்காமத்திலிருந்து பாதயாத்திரையும் சென்றார்.

பத்தாயிரம் இளைஞர்களைத் திரட்டும் குறிக்கோள் நிறைவேறாமலேயே பாதயாத்திரை பாதியில் நின்றது.

படைகளில் சேருவதற்குப் பதிலாக - படையிலிருந்து தப்பியோடுவோர்தான் அதிகரித்தது. இன்றும் இது நீடிக்கிறது. இலங்கை இராணுவத்தில் உள்ளோரின் தொகை ஒன்றரை இலட்சம் கூட இல்லை. அவர்களின் மொத்த எண்ணிக்கை - 1,34,000

போரின்போது கொல்லப்பட்டவர்கள் அல்லது காணாமற்போனவர்களின் தொகை - 11,400

இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்களின் தொகை - 49,143

அதாவது, இலங்கை இராணுவத்தில் மூன்றிலொரு தொகையினர் அதிலிருந்து தப்பியோடியிருக்கின்றனர்.

தப்பியோடி குற்றச்செயல்களில் ஈடுபட்டு இன்று சிறைவாசம் அனுபவிப்பவர்களில் ஐந்து பேர் சிறைக்குள் பேட்டியளித்திருக்கிறார்கள். அவர்களின் பெயர் விபரங்கள் வெளியிடப்படவில்லை.

பேராதனை பல்கலைக்கழகத்தின் சமூகவியல் பகுதியினர் இராணுவத்திலிருந்து தப்பியோடி குற்றச் செயல்களில் ஈடுபட்டு சிறைத்தண்டனை அனுபவிப்வர்கள் எதற்காக இதில் ஈடுபட்டார்களென்பதைத் தெரிந்துகொள்வதற்காக இவர்களைப் பேட்டி கண்டனர்.

"நான் 16 வருடங்களுக்கு முன் இராணுவத்தில் சேர்ந்தேன். பட்டாளத்தான் போடும் எடுப்பான சீருடையே எனக்கு ஆசையை ஏற்படுத்தியது. வடக்கு - கிழக்கில் நடந்த கடும் போரிலும், தெற்கில் ஜே.வி.பியின் எழுச்சியின்போதும் நான் இராணுவத்தில் பணியாற்றினேன். ஜெனரல் டென்சில் கொப்பேகடுவவின் தலைமையில் வடமராட்சி ஒப்பரேஷன் லிபரேஷன் தாக்குதல்தான் நான் பங்குபற்றிய சிறந்த படை நடவடிக்கை. இக்காலத்தில் படைத் துருப்புக்களை இராணுவ அதிகாரிகள் நன்கு கவனித்ததுடன், உற்சாகப்படுத்தி எந்த எதிர்ப்பையும் சமாளிக்கக்கூடிய மனத்தைரியத்தை ஊட்டிவந்தனர். ஆனால், ஜயசிக்குறு நடவடிக்கையிலிருந்து எல்லாமே கீழ்நோக் கிச் சென்றன. இந்த போரில் பங்குகொண்ட 650 துருப்பினரில் 448 பேர் கொல்லப்பட்டனர். 252 பேர்தான் உயிர்தப்பினர். எங்களுடைய உத்தியோகத்தர்களின் பலவீனத்தாலேயே இந்த அழிவு ஏற்பட்டது. இதனால், நான் முற்றாக மனமுடைந்து போனேன். சாவகச்சேரியில் நான் கடமையாற்றிக் கொண்டிருந்த சமயம் கிளைமோர் குண்டினால் நான் காயமடைந்தேன். எனது இடது காலில் பெரிய காயமேற்பட்டது. குணமடைவதற்கு நீண்டகாலம் எடுத்தது. காயமடைந்த தொடக்கத்தில் என்னை நன்றாகக் கவனித்தனர். பின்னர் என்னை எவரும் வந்து பார்ப்பதில்லை, என்னைக் கவனிக்கவில்லை. என்மீது அன்பு காட்டவில்லை. காவல்கடமை செய் யும்படி என்னைக் கேட்டனர். இதனால் நான் மனம் வெறுத்தேன். இராணுவத்தை விட்டுவிலகித் தப்பிச் செல்ல தீர்மானித்தேன். நான் விடுமுறையில் எனது வீட்டுக்குச் சென்றேன். திரும்பிப் படைக்குப் போகவில்லை. எந்த நேரத்திலும் நான் கைதுசெய்யப்படலாம் என்ற, அச்சத்துடனேயே கிராமத்தில் தங்கியிருந்தேன். நான் உயிர் வாழ்வதற்காக சிறுசிறு வியாபாரம் செய்தேன். இச்சமயத்தில் காசோலை ஒன்று வங்கியில் பணம் இல்லாததால் திரும்பிவிட்டது. இதன் விளைவு நான் இப்போது சிறையிலிருக்கிறேன்' என்று ஒரு கைதி சொன்னார்.

தமது மாமனார் செத்துப்போன தகவலை தனக்குத் தெரிவிக்கும்படி வீட்டுக்காரர் ஐந்து தடவை சொல்லியும் தனக்குத் தகவல் தெரிவிக்கவில்லையென்பதால் தப்பியோடியதாக இன்னொரு கைதிசொன்னார். இச்சமயத்தில் ஆனையிறவில் அவர் பணியாற்றி வந்தாராம். படையிலிருந்து வெளியேறிய பின் பணமுடை, மனவிரக்தி எல்லாம் சோந்து, குற்றச்செயல்களில் ஈடுபட்டு தனது சில நண்பர்களுடன் சேர்ந்தேன். பல கொள்ளைகளில் ஈடுபட்டுத் தப்பினேன். இதனால், அதிக பணம் சம்பாதித்தேன். கடைசியில் மாட்டிக்கொண்டேன். இன்று பத்துவருட சிறைத்தண்டனை பெற்று சிறையிலிருக்கிறேன்.

இப்படி மற்றவர்களும் பல காரணங்களையும் சொல்லியிருக்கின்றனர். இவ்விபரம் பிரபல ஆங்கில வாரப் பத்திரிகையொன்றில் வெளிவந்திருக்கிறது.

இப்பொழுது தெரிகிறதா கதிர்காமரும் சந்திரிகா அம்மையாரும் திருகோணமலைக்கு ஆபத்து அப்படியே இந்தியாவுக்கும் ஆபத்து என்று ஓலமிடுவது,

இந்த இலைக்கு சொதி ஊத்துங்க அப்படியே என் இலைக்கும் கொஞ்சம் விடுங்க என்றகதைதான்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

## நாற்சந்தி

'நான் சிறையில் இருந்த போது அமைந்த துன்பங்களை அடைவதாக உணர்கிறேன்.' - இவ்வாறு சிறிலங்காவின் சிறையொன்றில் குற்றங்கள் எதுவும் செய்யாதநிலையில் வெறுமனே சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டு, 8 ஆண்டுகள் சிறைவாசம் அனுபவித்த தமிழ் இளைஞர் ஒருவர் பத்திரிகைக்கு அளித்த பேட்டியொன்றில் வேதனையுடன் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை அரசு பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் நியாயமற்ற முறையில் அரசியல் உள்நோக்கங்களுக்காக, குற்றங்கள் எதுவும் செய்யாத நிலையிலும் கைதுசெய்து சிறையிலடைத்து விசாரணைகள் ஏதுமின்று நீண்ட நெடுங்காலங்கள் விடுதலையின்றி தவிக்கும் தமிழ் இளைஞர் யுவதிகளின் துயரவரலாறுகள் மக்கள் அறியாததல்ல.

அப்படிப்பட்டவர்களை தமது விமர்சனங்கள் மற்றும் செயற்பாடுகள் மூலம் மேலும் நோகடிப்பது காட்டுமிராண்டித்தனமான பயங்கரவாதமாகும்.

'இத்தகைய மனித உணர்வற்ற ஈனர்களைத்தான் ஆயுள்தண்டனையளித்து சிறையில் அடைக்கவேண்டும். இவர்களால் அப்பாவிகள் குற்றவாளிகள் மாறும் ஆபத்து உண்டு.' - என்கிறார் முன்னாள் சிறைவாசியான ஒரு தமிழ் உணர்வாளர்.

-தெருவாசி



# குரங்குபாஞ்சானில் முஸ்லிம்கள் விவசாயம் செய்ய புலிகள் அனுமதி!

திருகோணமலை - குரங்குபாஞ்சான் பகுதியிலுள்ள முஸ்லிம் மக்களின் வயல்களில் நெற்செய்கையினை மேற்கொள்ள, விடுதலைப் புலிகள் அனுமதி வழங்கியுள்ளனர்.

விடுதலைப் புலிகளுக்கும், போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பிரதிநிதிகளுக்கும், முஸ்லிம் பிரதிநிதிகளுக்குமிடையே - நேற்று திருமலை மாவட்ட கண்காணிப்புக்குழுவின் அலுவலகத்தில் நடந்த சந்திப்பில், இதற்கான அனுமதியை விடுதலைப் புலிகள் வழங்கினர்.

நேற்றுக்காலை 10.30 மணி தொடக்கம் நண்பகல் 12.30 மணி வரை இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. இதில் - கண்காணிப்புக்குழு பிரதித்தலைவர் குர்சஸ்பர், மார்க்கிரட் குரூன், பெனடிஸ் ஸ்ரேல்கான் ஆகியோரும் விடுதலைப் புலிகளின் சார்பில் - திருமலை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் திலக், மாவட்ட பொருண்மிய மேம்பாட்டுப் பொறுப்பாளர் தர்மன் ஆகியோரும், முஸ்லிம்கள் தரப்பில் - குரங்குபாஞ்சான் விவசாய கமத்தொழில் சங்கத் தலைவர் இ.என்.முசாதீர் தலைமையில் எம்.எ.பதூர்,எஸ்.ஏச்.எம். சாஜீர், ரசாக் மௌலவி ஆகியோரும் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

இங்கு கருத்துத் தெரிவித்த திருமலை அரசியற்பொறுப்பாளர் திலக், குரங்குபாஞ்சான் பகுதியிலுள்ள நிலங்களில் - முஸ்லிம்கள் தமது விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியுமெனத் தெரிவித்தார். தமது குரங்குபாஞ்சான் முகாமிலிருந்து 500 மீற்றர் தூரத்தில் முஸ்லிம்களை விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன், முன்னர் விவசாயம் செய்தவர்களே அனுமதிக்கப்படுவரெனவும், புதிதாக எவரையும் விவசாயம் செய்ய அனுமதிக்க முடியாதெனவும் தெரிவித்தார்.

அத்துடன், இந்தப் பகுதியில் மீள்குடியேற்றம் தொடர்பாக, தமது தலைமையுடன் கலந்தாலோசனை செய்தபின்னர் அறிவிப்பதாகவும் திலக் தெரிவித்தார்.

தமது விவசாய நிலங்களில் விவசாயம் செய்ய அனுமதித்தமை தமக்கு திருப்தியைத் தருவதாக, முஸ்லிம் பிரதிநிதிகள் தெரிவித்தனர். (04,10)

# சமாதான நடவழக்கைகள் வெற்றிபெற படைத்தரப்பு பூரண ஒத்துழைப்பு வழங்கும்

## கிழக்கு இராணுவத்தளபதி மல்லவராச்சி

சமாதான நடவடிக்கைகள் வெற்றிபெற படைத்தரப்பு ஒத்துழைப்பு வழங்கும் என்று, கிழக்கு மாகாண இராணுவ கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் நந்த மல்லவராச்சி தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் பாதுகாப்பு நிலமைகள் - இராணுவத்தினருக்கும், புலிகளுக்கும் இருக்கின்ற உறவுகள் குறித்து, இடம்பெற்ற விசேட சந்திப்பொன்றின் போதே, அவர் இதனைத் தெரிவித்தார்.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் மட்டக்களப்பு மாவட்ட பிரதிநிதி தலைமையில் நடைபெற்ற இந்தச் சந்திப்பு - சூனியப் பிரதேசமான வவுணதீவு பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

சில சந்தர்ப்பங்களில் கீழ்மட்டத்திலுள்ளவர்கள், உயர் மட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கு தெரியாமல் பிரச்சினைகளை ஏற்படுத்தி விடுகின்றார்கள். இதனை உரியவாறு இரு தரப்பும் அணுகத்தவறின், சிலவேளைகளில் பூதாகாரமான சர்ச்சைகளுக்கு வழிவகுக்கும் என்று, கிழக்கு மாகாண இராணுவத்தளபதி நந்த மல்லவராய்ச்சி மேலும் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் - தமிழீழ விடுதலைப் புலிகளின் தரப்பில் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன், இராணுவத்தினர் சார்பில் கிழக்கு மாகாண படைத்தளபதி உட்பட இராணுவ உயரதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

### கட்டைபறிச்சானில் தமிழீழ வைப்பகம்

திருகோணமலை - மூதூர் கிழக்கு கட்டைபறிச்சானில் தமிழீழ வைப்பகக் கிளை ஒன்று திறந்து வைக்கப்படவுள்ளது. வடபகுதிக்கு வெளியே திறக்கப்படும் முதலாவது தமிழீழ வைப்பக கிளை இதுவாகும்.

### யாழ்...

காப்பு அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி சம்பவம் தொடர்பாக, உடனடியாக விசாரணை நடத்துமாறு, பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகளுக்கு பணித்துள்ளது. (01)

### கொழும்பு...

தற்காக - பொலிஸாருக்கு அதிநவீன தொலைத்தொடர்புக் கருவிகளும், சிறிய ஆயுதங்களும் வழங்கப்படவுள்ளது.

கொழும்பு, கோட்டை உட்பட அனைத்து பகுதிகளிலும் இன்று தொடக்கம் இந்த நடைமுறை அமுலுக்கு வரும்.

### இதுவரை...

தப்பி ஒடுவதாக இந்த ஆய்வில் இருந்து தெரியவருகிறது.

1995களுக்குப் பின், வன்னியில் படையினருக்கு ஏட்பட்ட பின்னடைவுகளில் இருந்து - இராணுவத்தில் இருந்து தப்பியோடியோரின் எண்ணிக்கை திடீரென அதிகரித்ததாகவும், இந்த ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

அத்துடன், இந்த பின்னடைவையடுத்து உடனடியாக தாம் முகாம்களில் தப்பியோடியதாக, 1500 படையினர் இந்த ஆய்வின்போது கருத்து தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு தப்பியோடிய படையினர், கொழும்பு பகுதியில் பாதாள உலககுழுக்களுடன் இணைந்து குற்றச்செயல்களில் ஈடுபடுவதாகவும், இந்த ஆய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

### இறுதிக்...

தார ஆலோசகர் ஜோய் மகேஸ்வரன் சிறான் பணிப்பாளர் இரேனியஸ் செல்வின், முன்னாள் சட்டமா அதிபர் சிவா பசுபதி, பேராசிரியர் இமானுவேற்பிள்ளை போல் டொமினிக், சட்டத்தரணி விஸ்வேந்திரன், பேராசிரியர் இராமசாமி ஆகியோர் பங்கேற்றனர்.

இந்த மாநாட்டில் திட்ட வரைபை இறுதி செய்தபின்னர், புலிகளின் பிரதிநிதிகள் குழு வன்னிக்குத் திரும்பும். நோர்வே ஏற்பாட்டாளர்கள் மூலம் அரசாங்கத்திடம், இந்தத் திட்டவரைபு இம்மாத நடுப்பகுதியில் கையளிக்கப்படும்.

# அமெரிக்க ஏவுகணைக் கப்பல் கொழும்புத்துறைமுகம் வந்தது



கொழும்பு வந்துள்ள அமெரிக்கப் போர்க்கப்பல்

அமெரிக்கக் கடற்படைக்குச் சொந்தமான ஏவுகணைத் தாங்கி யுத்தக் கப்பல் ஒன்று, கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்திருக்கிறது.

எரிபொருள் நிரப்புவதற்காகவே இந்தக் கப்பல், கொழும்புத் துறைமுகத்திற்கு வந்ததாக, இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜெவ்ரி லங்ஸ்ரீட் தெரிவித்தார்.

அமெரிக்க மக்களுக்கும், இலங்கை மக்களுக்கும் இடையிலான நட்பின் வெளிப்பாடே - இந்தக் கப்பலின் வருகை என, தூதர் மேலும் தெரிவித்தார்.

1985 ஆம் ஆண்டு நிர்மாணிக்கப் பட்ட இந்தக் கப்பலில் - 13 அதிகாரிகள் உட்பட 206 மாலுமிகள் பணியாற்றுகின்றனர். இவர்களில் 19 விமானிகளும் அடங்குவர்.

இதன் கட்டளை அதிகாரியாக ஜோன் பி.ஹறோல்ட் பணிபுரிகின்றார்.

இந்தக் கப்பல் 29 நொட்ஸ் வேகத்தில் செல்லக்கூடியது. இதில் அதிநவீன ஏவுகணைகள் பொருத்தப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

# வங்காலைப்பாடு தீ விபத்தில் 32 வீடுகள் எரிந்து நாசம்!

மன்னார் பேசாலையிலுள்ள வங்காலைப்பாட்டில் அமைந்த வாடிவீடுகளில், நேற்றுப் பிற்பகல் இடம்பெற்ற தீ விபத்தில் 32 இற்கு மேற்பட்ட மீனவர்களின் வீடுகள், பெறுமதிமிக்க வலைகள், மீன்பிடி உபகரணங்கள் என்பன முற்றாக நாசமாகியுள்ளன.

இது பற்றி மேலும் தெரியவருவதாவது, வாடிவீடொன்றின் சமையல் அடுப்பிலிருந்து பிடித்த தீ வேகமாக வீசிய காற்றினால், அருகிலிருந்த மண்ணெண்ணெய் பரல் ஒன்றில் தீப்பற்றிக் கொண்டது.

மிகவேகமாக பரவிய தீயினைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியாதது* போய்விட்டதாகவும், தெரிவிக்கப்படுகிறது.

இதன்போது - 65 இலட்சம் பெறுமதியான சொத்துக்கள் முற்றாக எரிந்து நாசமானதுடன், வாடிவீடொன்றில் இருந்த 2 இலட்சம் ரூபாவிலும் தீப்பற்றியது. மீனவர்களின் கடும் முயற்சியால் 70 ஆயிரம் ரூபா மீட்கப்பட்டது. இந்தச் சம்பவம் தொடர்பாக, அந்த இடத்திற்கு விரைந்தவிடுதலைப் புலிகளின் அரசியற்துறையைச் சேர்ந்தவர்கள் மனிதாபிமான உதவிகளை வழங்கினர். (201)

# ஜே.வி.பி.யுடன் பேச்சுநடத்த சுதந்திரக்கட்சி அழைப்பு!

(கொழும்பு)

சுதந்திரக் கட்சிக்கும், ஜே.வி.பிக்கும் இடையில் கூட்டணி அமைப்பது தொடர்பாக, உத்தியோகப்பற்றற்ற பேச்சுக்களை நடத்துவதற்கு சுதந்திக் கட்சி அழைப்பு விடுத்துள்ளது. சுதந்திரக்கட்சியின் செயலாளர் மைத்திரி பால சிறிசேன இதற்கான அழைப்பை விடுத்தார்.

இரு கட்சிகளும் கூட்டணி அமைப்பது தொடர்பாக, பேச்சுக்களை நடத்துவதற்கு முன்பதாக கலந்துரையாடப்படவேண்டியுள்ளதால், உத்தியோகப்பற்றற்ற பேச்சுக்களை நடத்த வருமாறு, சுதந்திரக்கட்சிச் செயலாளர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

# புலிகளின் நூலை...

காப்பு வலயத்தினுள் அமைந்துள்ள பருத்தித்துறை பலநோக்கு கூட்டுறவு சங்கத்தில் பணியாற்றும் இரு ஊழியர்கள், அண்மையில் விடுதலைப் புலிகளின் சாள்ஸ் அன்ரனி படைப் பிரிவினால் வெளியிடப்பட்ட 'நெருப்பாற்று நீச்சலில் 10 ஆண்டுகள்' என்ற நூலை எடுத்துச்சென்ற வேளை - இறங்குதுறை நுழைவாயிலில் அமைந்துள்ள சோதனைச் சாவடியில் வைத்து இவர்கள் இருவரும் கைதுசெய்யப்பட்டனர்.

கைதுசெய்யப்பட்ட இருவரும் பருத்தித்துறை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டு வாக்குமூலங்கள் பதியப்பட்டன.

புதிதாக வெளியிடப்பட்ட இந்த நூலினை ஓய்வு நேரங்களில் படிப்பதற்காக இவர்கள் கொண்டுசென்றதாக விசாரணைகளின்போது தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து, நேற்று நண்பகல் இருவரும் இவ்வாறான வெளியீடுகளை உள்ளே எடுத்துச்செல்லக்கூடாது என, எச்சரிக்கை செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டனர்.(202,09)

## புலிகளின் அரசியல் செயற்பாடுகளைத் தடைசெய்யும்

# அமெரிக்கச் சட்டத்திற்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ய முயற்சி

(கொழும்பு)

புலிகளின் அரசியல் செயற்பாடுகளுக்கு உதவியளிப்பதை தடைசெய்யும் - அமெரிக்க சட்டத்திற்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்படவுள்ளது.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள வடக்கு - கிழக்கு பகுதியில் சட்டம் வைத்தியம் மற்றும் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மனிதாபிமானப் பணிகள், அரசியல் நடவடிக்கைகளுக்கு அமெரிக்காவில் உள்ள தமிழர்கள் உதவி வழங்குவதற்கு தேசபக்தி சட்டத்தின் கீழான சரத்தும் தடையாகக் காணப்படுகிறது.

இந்தச் சட்டத்தின் கீழான திருத்தத்திற்கு சட்டரீதியில் எதிர்க்க, அமெரிக்காவிலுள்ள தமிழ் அமைப்புகளும் முன்வந்துள்ளன.

அமெரிக்காவின் தேசபக்தி சட்டத்திற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

நியூயோர்க்கிலுள்ள யாப்பு உரிமைகளுக்கான நிலையம், இந்த நடவடிக்கையை மேற்கொள்ள உள்ளது. அமெரிக்காவிலுள்ள நான்கு தமிழ் அமைப்புகளும், தமிழ் மருத்துவர் ஒருவரும் இதில் இணையவுள்ளனர்.

1996 இல் பயங்கரவாத விரோத சட்டத்திற்கு கொண்டுவரப்பட்ட திருத்தத்தையே, இவர்கள் எதிர்க்கவுள்ளனர். இந்தச் சட்டம் பயங்கரவாத அமைப்புகளுக்கு உதவி வழங்குவதை தடுத்திருந்தது. இந்தத் திருத்தத்தின்மூலம் சட்டத்தின் எல்லை மேலும் விரிவாக்கப்பட்டு, நிபுணர்களின் ஆலோசனையும், உதவியும்கூட வழங்கப்படக்கூடாது என்று தடைவிதித்திருந்தது.

# யாழ். தண்ணீர் தாங்கியடியில் படையினர் உஷார்நிலையில்!

யாழ்.தண்ணீர் தாங்கியடியில் இராணுவத்தினரும், பொலிஸாரும் தொடர்ந்தும் உஷார்நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த நான்காம் திகதி தண்ணீர் தாங்கியடியில் இடம்பெற்ற இராணுவ வாகனத்துடனான விபத்தின் போது, இரு இளைஞர்கள் உயிரிழந்த சம்பவத்தையடுத்து, ஆத்திரமடைந்த அப்பகுதி மக்கள் இராணுவத்தினரின் காவலரண முன்பாக கூடி, கடமையிலிருந்த இராணுவத்தினர் மீது கற்களை வீசித் தமது எதிர்ப்பைத் தெரிவித்திருந்தனர்.

இதனால், இப்பகுதியில் பெருமளவில் இராணுவத்தினரும், பொலிஸாரும் குவிக்கப்பட்டு மக்கள் எதிர்ப்பு நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தியிருந்தனர்.

நேற்றும், நேற்றுமுன்தினமும் நிலைமை வழமைக்கு திரும்பாத போதிலும் வன்முறைச் சம்பவங்கள் இடம்பெறலாம் என்ற அச்சத்தினால் இராணுவத்தினரும், பொலிஸாரும் தீவிர கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதுடன், ரோந்து நடவடிக்கையையும் தீவிரப்படுத்தியுள்ளனர்.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 07.10.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.